
1071

# வக்கீல்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 AUG 1956

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

... LAW ... CHANDRA ...
TIRUVADAMARUDUR P.O.
Date........



1956

1071/3-56

இதழ் 3

(மே—ஜூன்)

## இந்த இதழில்

| | |
|---|---|
| பெண்மையின் வெற்றி | 4 |
| தமிழ் நாட்டில் விநோபாபாவே | 5 |
| சர்க்கார் அறிக்கைகள் | 6 |
| புதிய சென்னைச் சட்டங்கள் | 7 |
| 1956-57 வருமான வரி விகிதம் | 9 |
| இந்து விவாகச் சட்ட விதிகள் | 10 |
| வழக்கும் – தீர்ப்பும் | 12 |
| கேள்வி - பதில் | 18 |
| கூட்டுறவுச் சட்டம் | 20 |

விலை அணா 4.

(All Rights Reserved.)

...ரெஸாக்...

THE VAKIL ✶ TAMIL LAW MAGAZINE

## "வக்கீல்"

**பொது மக்களுக்கான**
**உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை**

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 எப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மாதப் பத்திரிகையாகப் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சந்தரேசய்யர், B.A., B.L.,
,, S. சந்தானம், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,

[ஆசிரியர்]

## "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு இலங்கை உள்பட ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

**சந்தாதார்கள் கவனிக்கவும்:**—"வருட சந்தா" என்பது 12 தொடர்ந்த இதழ்களுக்கான சந்தாவைக் குறிக்கும். வருடச் சந்தாதாரர்களுக்கு 12 இதழ்கள் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும். சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26, கும்பகோணம்.
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

## "வக்கீல்"

(விளம்பர விகிதம்)
ஒரு முறை பிரசுரம் செய்ய

| | | |
|---|---|---|
| பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்) | ரூ. | 100 |
| உள் அட்டை முழுப் பக்கம் | ரூ. | 80 |
| உள் பக்கம் முழுப் பக்கம் | ரூ. | 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. | 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. | 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. | 5 |

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)


வெண்சங்கு நறுமண சீயக்காய்த் தூள்

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

நறுமண சீயக்காய்த்தூள்
REGD. No. 13817.

உரிமை:
S. பெத்தண்ண நாடார்
கீழவாசல்—தஞ்சாவூர்.



ஆடைகளை அழகு பெறச் செய்வது

★ அன்னகிளி ★

**சோப்**

— தயாரிப்பவர் —

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்.



Guarenteed and High class
Lace Silk Sarees
For Variety and Moderate Price

**MARUTHI VILAS**

Ariya: *M. Ramasamy Ayyar*
PURE SILK JAVILI MERCHANT
AYYAMPET
TANJORE DISTRICT

தரத்தில் உயர்ந்ததும்
சலவைக்கு மிகச் சிறந்ததும்
பெரும்பான்மையோர் விரும்பி
வாங்குவதும்




**எப்பொழுதும் வாங்கி**
**உபயோகியுங்கள்**

—: தயாரிப்பு :—

## M. K. சோப் ஒர்க்ஸ்

கும்பேஸ்வரர் தெற்குவீதி
**கும்பகோணம்**

---

### சிறப்பு ஏடுகள்

| | |
|---|---|
| பேசும் படம் | .. 0-12 |
| திங்கள் | .. 0-8 |
| காதல் | .. 0-8 |
| கலைக்கதிர் | .. 0-8 |
| அமுதசுரபி | .. 0-8 |
| சினிமா கதிர் | .. 0-8 |
| நல் வாழ்வு | .. 0-8 |
| உதய பானு | .. 0-6 |
| வானொலி | .. 0-5 |
| குமுதம் | .. 0-4 |
| உமா | .. 0-4 |
| வக்கீல் | .. 0-4 |
| சுதந்தரம் | .. 0-3 |
| கல்கண்டு | .. 0-2 |

Sole Agents Madras :
The Madras News Agency
Phone: 86241. Madras - 2.

---

## நிலம் விற்பனைக்கு

கும்பகோணம் டவுனுக்கு 8-மைல் தூரத்தில் நல்ல மெயின் ரஸ்தாவில் தனியான கிராமம் சுமார் 100-ஏகர் உயர்ந்த நஞ்சை புஞ்சையுமாக உள்ளது. பண்ணை சாகுபடியில் நல்ல முறையில் விவசாயம் நடந்து வருகிறது. புஞ்சை சுமார் 20-ஏகரில் தென்னை, வாழை, புளி, மூங்கில். மா இருக்கிறது. கரும்பு, புகையிலை, மஞ்சள் முதலான பெரும் லாபம் தரக்கூடிய வியாபாரப் பயிர்களுக்கு சேர்த்தியாகவும், சகலவித பண்ணை வசதிகளும் நிறைந்தது.

கீழே கண்ட விலாசத்திற்கு எழுதவும்:-

Owner,
c/o. Post Box No. 26,
Kumbakonam.

---

## சட்ட உருவகமும் சென்னை நாடக நிகழ்ச்சிகள் சட்டமும்.

யாவரும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதும், நாடகாபிமானிகளுக்குத் தேவையானதுமான **"சட்ட உருவகமும் சென்னை நாடக நிகழ்ச்சிகள் சட்டமும்"** என்னும் நாடகச் சட்டப் புத்தகம் விலை ரூ. **1—0—0.**

தேவைக்கு:—

**இரா. கஸ்தூரி, பி. ஏ., பி. எல்.,**
ஆசிரியர்,
பெரிய கடைவீதி,
கோயம்புத்தூர்.

---

உ
சிவமயம்.

## அவிநாசி தல புராணம்.

பொழிப்புரையுடன் புதிதாய் அச்சிடப்பட்டிருக்கிறது. அடியில் கண்ட இடத்தில் கிடைக்கும்.

மார்பிள் பைண்டு ரூ. 3 4 0.

S. K. Ramalingam Chettiar,
Brass and S ainless Steel V ssels
Merchant.,
Kumbeswarar South St., Kumbakonam

187745
சென்னை-600 028

# வக்கீல்

வாழிய செந்தமிழ் ! வாழ்க நற்றமிழர் !

மலர் 8 மே — ஜூன் 1956 இதழ் 3

## பெண்மையின் வெற்றி!

இந்து மக்கள் ஆவலுடனும், — சிலர் கவலையுடனும் — எதிர் பார்த்துக்கொண்டிருந்த இந்து வாரிசுரிமைச் சட்டத்தை நமது பார்லிமெண்டு சபை அங்கீகரித்து விட்டது. இச்சட்ட ஷரத்துக்கள் பல ஆண்டுகளாக உருவாகிக்கொண்டிருந்தன. முதலில் இது ராஜாங்க சபையால் அங்கீகரிக்கப்பட்டு பிறகு பார்லிமெண்ட்டின் மக்கள் சபைக்கு வந்தது. மக்கள் சபையில் சில மாறுதல்கள் செய்யப்பட்டபடியால் மறுபடியும் இது ராஜாங்க சபைக்குப் போய், அச்சபை இம் மாறுதல்களை ஏற்றுக்கொண்டது. இனி ஜனாதிபதி அவர்கள் தம் அங்கீகாரத்தை அளிப்பார்கள். அப்பொழுதுதான் இது சட்டமாகும். எப்படியும் இவ்வருடம் முடிவதற்குள் இந்து வார்சுரிமைச் சட்டம் அமுலுக்கு வந்து விடும். இது பெண் குலத்தின் வெற்றியாகும்!

"ஒரு ஸ்திரீயைக் குழந்தைப் பருவத்தில் காப்பாற்றவேண்டியவன் தகப்பன்; பாலியத்தில் அவளைக் காப்பாற்ற வேண்டியவன் கணவன்; வயோதிகத்தில் காப்பாற்றவேண்டியவன் மகன்; ஸ்திரீகள் சுதந்தரமாக இருக்க அருகதையற்றவர்கள்"— என்று மனு என்ற சட்ட நூலாசிரியர் சொல்லி எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் — இந்து ஸ்திரீகளின் நிலைமை சற்றேறக் குறைய அப்படியேதான் இருந்து வருகிறது. இது சரியா, தவறா, என்பதைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். இந்து சமுதாயத்தை ஸ்திரீகள் என்றும் ஆண்கள் என்றும் இரண்டு கட்சிகளாக மேடைப்பிரசங்கிகள் பிரித்துக் காண்பித்தாலும் — ஸ்திரீ என்பவள் ஒரு ஆணின் மகளாகவோ, மனைவியாகவோ தாயாகவோதான் இருக்கிறாள். இயற்கையால் ஏற்படும் இந்த இணைப்பை நொருக்கவோ, தளர்த்தவோ எச்சட்டங்களாலும் முடியாது. எந்த நவீன புரட்சி வீரனும் தம்முடைய தாயையும் மனைவியையும் மகளையும், மறந்துவிட மாட்டான். அவ்விதமே எந்த நவநாகரிக ஸ்திரீயும் தன்னுடைய தகப்பனையோ, கணவனையோ, மகனையோ வேற்று மனிதனாக நினைத்துவிட மாட்டாள். ஆண் இல்லாமல் பெண் சமுதாயமும், பெண் இல்லாமல் ஆண் சமுதாயமும் தனித்தனியே இருந்துவிட முடியாது; இவை கட்சிகளல்ல; இவைகளுக்குள் பிரசங்கமேடைகள் தவிர வேறு இடத்தில் யுத்தம் ஒன்றும் வந்துவிடாது.

இந்து வார்சுரிமைச் சட்டத்தில் புரட்சிகரமான புதிய ஷரத்துக்கள் இருந்தாலும் — இது இந்து சமுதாயத்திலேயே, அதன் அமைப்பிலேயே, உடனடியாக ஏதோ புரட்சியை ஒரு மாறுதலை உட்புகுத்தி விடுமென்பது பகற் கனவாகும்! பெண் மக்களுக்கு இச்சட்டத்தால் வார்சு முறைமையில் பல வழிகளில் சொத்துக்கள் வருவதைப்பற்றி ஆண் மக்களுக்கும் சந்தோஷம்தான். ஆனால் பெண் குலமானது இவ்வெற்றியை அடையும் இத்தறுவாயில் தனி மனிதனின் பெருவாரியான சொத்து சுதந்தரங்களும் மறையும் தருணத்தில் இருப்பது வருந்தத்தக்கதேயாகும்!

# தமிழ் நாட்டில் விநோபா பாவே

மகாத்மாவின் பிரதம சீடர்களில் ஒருவர் விநோபா பாவே. ஆனால் விநோபாஜிக்கு அரசியலில் அதிக ஆர்வம் கிடையாது. மக்களின் பொருளாதார க்ஷேமங்களிலும் ஆன்மீக விஷயங்களிலும் தம்முடைய கவனத்தை அதிகமாகச் செலுத்துபவர் விநோபாஜி. இப்பொழுது இந்தியா முழுவதும் கால் நடையாகத் தம்முடைய சீடர்களுடன் யாத்திரை செய்து வரும் விநோபா அவர்கள் இன்னும் சில மாதங்கள் தமிழ் நாட்டிலேயே சஞ்சரிப்பார்கள். அநேகமாகத் தமிழ் மக்கள் அனைவருக்கும் அன்னாரை நேரில் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

விநோபாஜி ஒரு மகத்தான லட்சியத்துடன் தான் இந்த யாத்திரை செய்து வருகிறார். அந்த லட்சியம் என்ன? மக்களின் பொருளாதாரத்துறையில் ஒரு சமத்துவம் வேண்டும். இந்த சமத்துவமானது சட்டங்களினாலோ, பலாத்காரத்தினாலோ ஏற்படுவதை விநோபா விரும்பவில்லை. சொத்து சுதந்தரமுள்ளவர்கள் தாங்களாகவே, ஒரு மனமாற்றத்தினால் முன் வந்து, தங்களிடம் இருக்கும் சொத்துக்களின் ஒரு பகுதியைத் தானமாக அளிக்க வேண்டும். தானமாகக் கொடுப்பது நிலமாகவும் இருக்கலாம்; வேறு வகை சொத்துக்களாகவும் இருக்கலாம். இரண்டுமில்லாதவர்கள் தங்களுடைய உடலுழைப்பையும் தானமாகக் கொடுக்கலாம். அதைப் போலவே, சொத்து சுதந்தரம் இல்லாதவர்கள் பலாத்காரத்தினால் பிறருடைய சொத்துக்களை அடையத் திட்டம் செய்வதையும் விநோபாஜி அங்கீகரிக்கவில்லை.

இப்பொழுது இந்நாட்டிலுள்ள சூழ்நிலையில் விநோபாஜியின் பூதான இயக்கமானது வெற்றியடையும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வேறு காரணத்தினால். ஆங்கிலேயர் இந்நாட்டை ஆட்சி செய்து வந்த காலத்தில் விநோபாஜி இவ்வித பூதான யாத்திரை செய்திருந்தால் அதை ஆங்கிலேயர் தடுத்திருக்க மாட்டார்கள். ஏனென்றால் அரசியல் சம்பந்தமில்லாத எந்த இயக்கத்தையும் வெள்ளையர் தடுக்கவில்லை. ஆனால் அப்பொழுது விநோபாஜிக்கு பூதானம் செய்ய ஒருவரும் முன் வந்திருக்கமாட்டார்கள் - என்பது திண்ணம். அதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஏனென்றால் காரணமில்லாமல் ஒருவர் தம்மிடமிருக்கும் சொத்து சுதந்தரங்களை தானமாகக் கொடுக்க மறப்பது சாதாரண மனித இயல்பே.

ஆனால், இன்றைய சூழ்நிலை வேறு. மற்றவகை தானங்களை விநோபாஜி அடைந்தாலும் அடையாவிட்டாலும் பூதானத்தை அன்னார் ஏராளமாக அடைவார்கள். அதிக நிலங்களை உடைய பெரு நிலக்கிழார்கள் இப்பொழுது ஒரு திகிலடைந்த மனநிலைமையில் இருக்கின்றனர். வரப்போகும் நிலச் சட்டங்கள் தங்களிடமிருக்கும் நிலங்களின் பெரும்பான்மையை அபகரித்துக்கொண்டுவிடுமென்ற பயம் அவர்களுக்கு ஏற்பட்டு மூன்று வருடங்களுக்கு மேலாகிறது. அதிக குழந்தை குட்டிகளை உடைய பெரு நிலப் பிரபுக்கள் தங்களுடைய நிலங்களைத் துண்டாடிப் பாகம் செய்து கொண்டு, சின்ன மிராசுதார்களைப் போலவே தஸ்தவேஜுகள் மூலம் தோற்றமளிக்கின்றனர். பாகம் செய்து கொள்ள அதிக நபர்களில்லாத பெரிய பண்ணைகள் பலவகையான தான தர்மங்களுக்காக நிலதானம் செய்தும் விட்டனர். நிலத்தை ஆதாரமாகக் கொண்டு பல காலேஜுகளும் உயர் நிலைப்பள்ளிகளும் தோன்றிக்கொண்டிருக்கின்றன. பெரு நிலக்காரர்களின் மனம் மாறி விட்டது. ஆனால் இவர்களுடைய மனம் மாறியது ஒருவித புனிதமான ஆன்மீக உணர்ச்சியினால்தான் என்று சொல்லி விட முடியாது. சூழ்நிலையில் தங்களுடைய ஸ்தானத்தை பலப்படுத்திக் கொள்ளும் முறையில் இவர்களுடைய மனமாற்றம் ஏற்பட்டு விட்டது. இவர்களெல்லாம் விநோபாஜியின் தமிழ் நாட்டு யாத்திரையை மிக வெற்றிகரமாகச் செய்து அன்னாரிடம் இன்னும் ஏராள நிலங்களை ஒப்படைப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

நிலம் தவிர மற்ற வகை தானங்களை விநோபாஜி அதிகமாக எதிர்பார்க்க முடி

யாது. உதாரணமாக, இந்திய சர்க்காரிலோ, ராஜ்ய சர்க்காரிலோ மாதம் ஆயிரம் ரூபாயக்கு மேல் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் எத்தனையோ நபர்கள் எங்கும் இருக்கின்றனர். இவர்கள் இப்போது வசிப்பது ஒரு கற்கோட்டைக்குள். இவர்களுடைய வருமானத்தை பாதிக்கும் சட்டம் ஒன்றும் இப்போது வராது. இவர்களில் சிற்சிலராவது விநோபாஜியின் உபதேசங்களைக் கேட்டு ஆயிர ரூபாய்க்கு மேற்பட்ட தங்களுடைய மாத வருமானத்தை விநோபாஜியிடம் ஒப்படைத்தால் — அது தான் உண்மையான ஆன்மீக மன மாற்றமாகும்.

விநோபாஜியின் தமிழ் நாட்டு யாத்திரை பூதான இயக்கத்தின் ஒரு மகத்தான வெற்றியாகும். வாழ்க விநோபா பாவே!

## இந்து வாரிசுரிமைச் சட்டம்

இச்சட்டமானது ஜனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்டவுடன், இரண்டு "வக்கீல்" இதழ்களை ஒன்றாகச் சேர்த்து இச்சட்ட விளக்கம் தனிப் புத்தக வடிவத்தில் பிரசுரம் செய்யப்படும். இம்முக்கியச் சட்டத்தின் ஆங்கில வாசகத்தையும் அப்படியே அதில் அச்சடித்துக் கொடுக்கவும் உத்தேசித்திருக்கிறோம். "வக்கீல்" வருட சந்தாதார்களுக்கு மட்டில்தான் இப்புத்தகம் இரண்டு "வக்கீல்" இதழ்களுக்குப் பதிலாக அனுப்பப்படும். வருட சந்தாதாரல்லாதவர்கள் ரூ. 1 செலுத்தி இப்புத்தகத்தை வரவழைத்துக் கொள்ளலாம்.

---

(புதிய சட்டங்கள் 8-ம் பக்கம் தொடர்ச்சி)

*10.* சென்னை கைத்தொழில் அரசாங்க உதவிச் சட்டத் திருத்தம்.

Madras State Aid to Industries Amendment Act 1956. (9-5-1956) கைத்தொழில்களுக்குச் சர்க்கார் பணஉதவி செய்வதற்காக 1923-ல் ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அச்சட்டப்படி உதவி அடைவதில் காலதாமதமும் கஷ்டங்களும் இருந்தபடியால் அச்சட்ட ஷரத்துக்கள் இத்திருத்தச் சட்டத்தால் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன.

*11.* புதுக்கோட்டை இனாம் செட்டில்மெண்ட் திருத்தச் சட்டம்.

Pudukkottai Settlement of Inams Amendment Act 1955. (9-5-56) 1955-ம் வருடத்திய 24வது சென்னைச் சட்டமாகிய புதுக்கோட்டை இனாம் செட்டில்மெண்ட் சட்டத்தின் செக்ஷன் 6-என்பது இத்திருத்தச் சட்டத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது. அதாவது மனோவிர்த்தி, சின்னரண்மனை ஆகிய இரண்டு ஜாகீர்களுக்கும் 1955-ம் வருடத்திய 23-வது சட்டம்கிடையாதென்று இருந்த அச்சட்டத்தின் செக்ஷன் 6-இப்போது ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆகையால் அவ்விரண்டு ஜாகீர்களுக்கும் புதுக்கோட்டை இனாம் செட்டில்மெண்டுச் சட்டம் உண்டு.

## சர்க்கார் அறிக்கைகள்

### சென்னை நகர குடிக்கூலிக்காரர்கள் பாதுகாப்புச் சட்டம்—வேறு சில இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

இச்சட்ட ஷரத்துக்கள் அடியில் கண்ட இடங்களில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன :-

செங்கல்பட்டு ஜில்லாவில் :—சைதாப்பேட்டைத் தாலூகாவைச் சேர்ந்த ஆதம்பாக்கம்; ஆலந்தூர்; கோடம்பாக்கம்; மீனம்பாக்கம்; பரங்கிமலை கண்டோன்மெண்ட் ஏரியா; சாலிக்கிராமம்; திருவண்மயூர்; திருவொட்டியூர்; வேளச்சேரி; வில்லிவாக்கம். (14-3-56 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I பக்கம் 324 G. O. 1135 Revenue.)

திருச்சி ஜில்லாவில் :-கரூர் முனிசிபாலிடி.

தஞ்சாவூர் ஜில்லாவில்:-மாயூரம் முனிசிபாலிடி; தஞ்சாவூர் முனிசிபாலிடி. (28-3-1956 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 410 G. O. 1345 Revenue)

# புதிய சட்டங்கள்

சுருக்கியும்-வரிசையாகவும்

## 1955-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்

[சென்னை சட்ட மன்றத்தாரால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் ''வக்கீல்'' முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

### 41. நடுத்தர மில் துணி அதிக விற்பனை வரி விதிப்புச் சட்டம்

Madras Medium Cotton Mill Cloth (Sales Tax) Act 1954 சென்னைச் சட்ட சபையால் இயற்றப்பட்ட இச் சட்டத்திற்கு 22-3-1956ல் ராஷ்டிரபதி அவர்கள் அங்கீகாரம் அளித்திருக்கின்றனர். இச் சட்டப்படி நடுத்தர மில் துணியை சென்னை ராஜ்யத்தில் முதல் தடவையாக விற்பனை செய்யும் வியாபாரியானவர் அவருடைய மொத்த விற்பனையின்மீது ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணு மூன்று தம்படி வீதம் ஒரு அதிக விற்பனை வரி கொடுக்கவேண்டும். விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 3(1)படி வியாபாரிகள் ரூ. 1க்கு காலணு வீதம் கொடுக்கவேண்டிய விற்பனை வரி தவிர இவ்வரியானது அதிகப்படியாகக் கொடுக்கப்படவேண்டும்.

நடுத்தர மில் துணியானது இந்தியாவுக்கு வெளியிலிருந்தோ அல்லது சென்னை ராஜ்யத்துக்கு வெளியிலிருந்தோ இறக்குமதியானல், இறக்குமதி செய்யப்பட்டபிறகு எந்த வியாபாரியானவர் முதல் தடவையாக நடுத்தர மில் ஜவுளியை விற்பனை செய்கிருரோ அவர்மட்டில்தான் இவ்வதிகவரி கொடுக்கவேண்டும். இவ்வித மில் துணியை விற்பனை செய்யும் ஒரு வியாபாரியானவர் தாம் அதைச் சென்னை ராஜ்யத்தில் முதல் தடவையாக விற்கவில்லை என்ருே, அல்லது இறக்குமதியானபிறகு விற்கவில்லை என்ருே சொன்னல் அதை ருசுப்பிக்கும்பொறுப்பு வியாபாரியினுடையதாகும். நடுத்தர மில் துணி என்ருல் 17 கவுண்டுக்கு மேல் 35 கவுண்டுக்குள் உள்ள பாவு நூலைக் கொண்டு நெசவு செய்யப்பட்ட துணியாகும். கரையில் உபயோகிக்கப்படும் நூலைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.



## 1956-ம்வருடத்திய சென்னைச் சட்டங்கள்

**1. கால்வாய் தோணித்துறைச் சட்டத் திருத்தம்.**

Madras Canals and Public Ferries Amendment Act 1956. (29-2-1956). 1890-ம் வருடத்திய கால்வாய்ச் சட்டத்தின் செக்ஷன் 10(4) திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது தோணித் துறைகளில் கிடைக்கும் நிகர வருமானத்தை அத்துறையின் இரு கோடிகளிலுமுள்ள ரஸ்தாக்களைப் பராமரிக்கும் ஸ்தாபனங்களிடையே (அதாவது ராஜ்ய சர்க்கார் உள்பட) வீதாசாரமாக சர்க்காரால் பிரித்துக்கொடுக்கப்படும் என்று திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இத் திருத்தமானது 6-11-1947 முதல் அமுலுக்கு வந்துவிட்டதாக பாவிக்கப்படும்.

**2. தென் கன்னடம் சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டத் திருத்தம்.**

South Kanara cultivating Tenants Protection Amendment Act 1956. (1-3-1956) தென் கன்னடம் ஜில்லாவில் அமுலில் உள்ள இச்சட்டமானது இன்னும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

**3. சென்னை பொது விற்பனைவரிச் சட்டத் திருத்தம்.**

Madras General Sales Tax Amendment Act 1956. (28-3-1956) பொது விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 3(1) என்ற ஷரத்தால் ரூ. 10000 அல்லது அதற்கு மேல் மொத்த வியாபாரமுள்ள எல்லா வியாபாரிகளுக்கும் ரூ. 1க்கு 3 தம்படி வீதம் விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர சில சரக்குகளுக்கு மட்டில் செக்ஷன் 3(2) என்ற ஷரத்தால் ஒரு அதிக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிக வரி ஜாப்தாவில் கீழே கண்ட சரக்குகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதாவது, (i) பட்டு, செயற்கைப்பட்டு, கம்பளம், சணல் அல்லது வேறு பொருளைக் கொண்டு முழுதும் பருத்தியிலேயே தயாரிக்கப்படாத (கைத்தறித் துணி நீங்கலாக) துணிகளின் விற்பனையின் மீது ரூ. 1க்கு 0-1-3 வீதம் அதிக வரி (ia) முழுதும் பருத்தியைக் கொண்டே தயாரிக்கப்படாத மற்ற மேஜோடு வகை (Hosiery goods) சரக்குகளுக்கு— ரூ. 1க்கு 0-1-3 வீதம் அதிக வரி. (ii) கைத்தறித்துணி அல்லாத மற்ற நேர்த்தியான அல்லது அதிக நேர்த்தியான பருத்தித் துணி விற்பனைக்கும் ரூ. 1க்கு 0-1-3 வீதம் அதிகவரி (iii) வைரம், மரகதம், மாணிக்கம் நல்முத்து, நீலம் முதலிய விலை மதிப்புள்ள ரத்தினங்களின் விற்பனைக்கு

ரூ. 1க்கு 0-1-3 வீதம் அதிக வரி இவ்வரிகள் விதிக்கப்பட்டிருக்கிறன. இந்த வரி விதிப்பு ஷரத்தானது 2-8-1954 முதல் அமுலுக்கு வந்துவிட்டதாக பாவிக்கப்படும்.

**4. அரசாங்க பொதுச்செலவு அனுமதிச் சட்டம்.**

Madras Appropriation Act 1956. (31-3-1956) 1-4-1956 முதல் ஆரம்பமாகும் நிதி வருடத்தில் சென்னை அரசாங்க மானது பொதுப் பணத்திலிருந்து ரூ. 1,72,64,83,100 செலவு செய்ய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

**5. சென்னை அரசகங்கப் பொதுச் செலவு அனுமதி இரண்டாவது சட்டம்.**

Madras Appropriation (No. 2) Act 1956 (31-3-1956) 1-4-1955ல் ஆரம்பமான நிதி வருடத்தில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செலவு போக இன்னும் அதிகமாக ரூ. 58,36,53,200 செலவு செய்ய சென்னை சர்க்காருக்கு அதிகாரமளிக்கும் சட்டம்.

**7. பொது விற்பனை வரிச் சட்டம் இரண்டாவது திருத்தம்.**

Madras General Sales Tax—Second Amendment - Act 1956. (14-4-1956) சர்க்கரை (முதல் விற்பனையின்மீது) அதிகப்படியாக ரூ. 1க்கு அணு 1 வீதம் அதிக விற்பனை வரி விதிக்கப்பட் டிருக்கிறது. இதற்காக விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 3(2) என்ற ஷரத்து திருத்தப்பட்டிருக்கிறது.

**8. கட்டாய வேலைக் (குடி மராமத்து) சட்டத் திருத்தம்.**

Madras Compulsory Labour Amendment Act 1956 (9-5-1956) கிராமங்களில் செய்யப்பட வேண்டிய குடி மராமத்து வேலைகள் விஷயமாக 1858ம் வருடத்திய மத்திய சட்டம் இருக்கிறது. அதன் ஷரத்தை அமுல் நடத்துவதில் தொல்லைகள் இருந்ததால் அச்சட்டத்தின் செக்ஷன் 6 என்ற ஷரத்தின் வாசகம் முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. திருத்தி அமைக்கப்பட் டிருக்கும் புதிய செக்ஷன் 6 பின்வருமாறு:— தாசில்தார் அல்லது அவருக்கு மேலான ரிவின்யூ அதிகாரியின் உத்தரவை அனுசரித்து ஒரு கிராம பெரிய தனக்காரரானவர் பாசன வடிகால் சம்பந்தமான குடிமராமத்து வேலைகளைப்பற்றி ஒரு பொது அறிக்கை மூலம் அறிவிப்பார். சம்பந்தப்பட்ட பாசன அல்லது வடிகால் வேலைகளினால் பலனடைகிற நிலங்களின் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட குடிமராமத்து வேலைகளுக்காக வேலையாட்களைக்கொண்டு உதவவேண்டும். கிராம பெரிய தனக்காரரால் பிரசுரம் செய்யப்படும் பொது நோட்டீசில் யார் யார் வேலையாட்களைக் கொடுத்து உதவ வேண்டுமென்றும்; எந்த எந்த காலத்தில் வேலை செய்யப்பட வேண்டுமென்றும் விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். இது விஷயத்தை தம்பட்டம் செய்வதன்மூலமும் வேறுவிதமாகவும் பிரசுரம் செய்யலாம். உத்தரவு பிறப்பித்த தாசில்தார் அல்லது ரிவின்யூ அதிகாரியின் ஆபீசிலும் இந்த நோட்டீஸ் ஒட்டப்படும். இந்த நோட்டீசில் குறிப்பிடப் பட்டிருப்பவர்கள் வேலை ஆட்களை அனுப்புவதற்குப் பதிலாக தாசில்தாரின் உத்தரவில் குறிப்பிட்ட தொகையையும் செலுத்தலாம். வேலையாட்களை அனுப்பாமலும் அதற்கான பணமும் கொடுக்காமலும் ஒருவர் இருந்துவிட்டால், வேறு ஆட்களைக் கொண்டு கிராம பெரிய தனக்காரர் செய்துவிடுவார். ஆனால் அதற்கான செலவைமேற்கண்டபடி ஆள் அனுப்பவோ கட்டணம்கட்டவோ தவறியவர் பொறுத்துக்கொள்ள வேண்டும் ஒருவர் ஆள் அனுப்புவதற்குப் பதிலாகக் கொடுக்கவேண்டிய கட்டணத்தைப்பற்றி ஏதாவது தகராறு இருந்தால் அதைத் தீர்க்க கலெக்டருக்கு அதிகாரம் இருக்கிறது. வேலையாட்கள் அனுப்பாதவர்கள் பலர் இருந்தால் அவர்கள் ஒவ்வொருவரும் அவரவருக்குள்ள நிலங்களின் வீதாசாரப்படி எவ்வளவு கட்டணம் கொடுக்க வேண்டுமென்பதை தாசில்தாரோ அல்லது ரிவின்யூ அதிகாரியோ நிர்ணயம் செய்வார். இச் சட்டப்படி ஒருவர் கொடுக்கவேண்டிய தொகைகளை ரிவின்யூ கிஸ்தி போலவே வசூல் செய்யப்படலாம்.

(குறிப்பு:—முன்பு இருந்த ஷரத்தின்படி ஒவ்வொரு நிலச் சுவான்தாருக்கும் தனித்தனி நோட்டீசு கொடுக்கப்பட் டிருந்தாலொழிய குடிமராமத்துக்கான செலவுகளை வசூல் செய்ய முடியாமல் இருந்தது, இத்திருத்த ஷரத்தின்படி கிராமத்தில் கிராம பெரிய தனக்காரரால் பிரசுரம் செய்யப்படும் நோட்டீசே போதும். அதில் குறிப்பிடப்பட்டவர்களை அது கட்டுப்படுத்தும்.)

**9. சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்டத் திருத்தம்.**

Madras Hindu Religious and Charitable Endowments Amendment Act 1956 (9-5-1956) குறிப்பிட்ட கோயிலைப்பற்றி அறிக்கையிட்டால் (Notify) அதன் நிர்வாக மானது இச் சட்ட ஷரத்துக்களின்படி நடத்தப்படும். ஆனால் அந்த அறிக்கையானது 5 வருடம்தான் அமுலில் இருக்குமென்று இருந்தது. இத் திருத்தத்தால் இந்த 5 வருடத்திற்கு மேலும் அதை நீடிக்க சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட் டிருக்கிறது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

# வரிகள்

## 1956-57 வருமான வரி விகிதம்

1956-ம் வருடத்திய 18-வது மத்தியச் சட்டமாகிய நிதிச் சட்டத்தால் (The Finance Act 1956) 1-4-1956 முதல் ஆரம்பமாகும் நிதி வருடத்தில் அடியில்கண்ட விகிதப்படி வருமான வரி விதிக்கப்படும்.

### 1956—57 - வருமான வரி விகிதங்கள்

A. தனி நபர்கள்

திருமணமான ஒவ்வொரு தனி நபருக்கும் ஒவ்வொரு பிரிபடாத இந்துக் குடும்பத்திற்கும் அடியில் கண்டபடி வருமானவரி விதிக்கப்படும்.

| | | | வருமான வரி | சர்சார்ஜ் |
|---|---|---|---|---|
| 1. | வருமானத்தின் முதல் | ரூ. 2000க்கு | இல்லை | இல்லை |
| 2. | அடுத்த | ரூ. 3000க்கு ரூ. 1க்கு | 0—0—9 | வருமான வரியில் 20ல் 1பாகம் |
| 3. | அடுத்த | ரூ. 2500க்கு | 0—1—9 | ஷை |
| 4. | அடுத்த | ரூ. 2500க்கு | 0—2—3 | ஷை |
| 5. | அடுத்த | ரூ. 5000க்கு | 0—3—3 | ஷை |
| 6. | பாக்கி ஜாடாவுக்கும் | | 0—4—0 | ஷை |

திருமணமாகாத தனி நபர்களுக்கும் ரிஜிஸ்டராகாத கூட்டு வியாபாரங்களுக்கும் சங்கங்களுக்கும்:—

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வருமானத்தின் முதல் | ரூ. 1000க்கு | இல்லை | இல்லை |
| 2. | அடுத்த | ரூ. 4000க்கு | 0—0—9 | வருமான வரியில் 20ல் 1பாகம் |
| 3. | அடுத்த | ரூ. 2500க்கு | 0—1—9 | ஷை |
| 4. | அடுத்த | ரூ. 2500க்கு | 0—2—3 | ஷை |
| 5. | அடுத்த | ரூ. 5000க்கு | 0—3—3 | ஷை |
| 6. | பாக்கி ஜாடாவுக்கும் | | 0—4—0 | ஷை |

ஆனல் அடியில் கண்டவர்களுக்கு வருமான வரி கிடையாது.

அதாவது தனி நபர்களுக்கு வருட வருமானம் ரூ. 4200 அல்லது அதற்குட்பட்டிருந்தால் வருமான வரி விதிக்கப் படமாட்டாது. பிரிபடாத இந்துக்குடும்பங்கள் சம்பந்தப்பட்டவரையில் முந்திய வருடக்கடைசியில் பாகம் கேட்கக்கூடிய இரண்டு நபர்களாவது இருந்தால் அக்குடும்பத்திற்கு வருட வருமானம் ரூ. 8400க்கு அதிகப்படாமலிருந்தால் வருமான வரி கிடையாது; பாகம் கேட்கக்கூடிய நான்கு நபர்களாவது இருக்கும் குடும்பத்திற்கு ரூ. 12600க்கு அதிகப்படாமல் வருமானம் இருந்தால் அக் குடும்பத்திற்கும் வருமான வரி விதிக்கப் படமாட்டாது.

அடியில் கண்டவர்களுக்கு சர்சார்ஜ் கிடையாது.

தனி நபரின் வருமானம் ரூ. 7200க்கு அதிகப்படாமலும்; இரண்டு பாகம் கேட்கக்கூடிய நபர்களாவது இருக்கும் பிரிபடாத இந்துக் குடும்ப வருமானம் ரூ. 14,400க்கும்; பாகம் கேட்கக்கூடிய நாலு நபர்களாவது இருக்கும் பிரிபடாத இந்துக்குடும்ப வருமானம் ரூ. 21,600க்கும் அதிகப்படாமல் இருந்தால் இவர்களுக்கு சர்சார்ஜ் என்ற உபரிவரி கிடையாது.

B. கம்பெனிகளுக்கு

மொத்த வருமானம் ஜாடாவுக்கும் வருமான வரி ரூ. 1க்கு அணு 4-ம் அதில் 20ல் 1பங்கு சர்சார்ஜ் வரியும் உண்டு.

C. ஸ்தல ஸ்தாபனங்களுக்கும்

மேலே கம்பெனிகளுக்கு எப்படியோ அப்படியே.

D. ரிஜிஸ்டரான கூட்டு வியாபாரங்களுக்கு

| | | |
|---|---|---|
| முதல் | ரூ. 40 000க்கு | வரி இல்லை. |
| அடுத்த | ரூ. 35,000க்கு | ரூ. 1க்கு 0-0-9 |
| அடுத்த | ரூ. 75,000க்கு | ரூ. 1க்கு 0-1-0 |
| பாக்கி ஜாடாவுக்கும் | | ரூ. 1க்கு 0-1-6 |

[குறிப்பு:—ரிஜிஸ்டரான கூட்டு வியாபாரங்களின் கூட்டாளிகளுக்குத் தனித் தனியே விதிக்கப்படும் வருமான வரி தவிர கூட்டு வியாபாரத்தின்மீதே மேற்கண்டபடி வருமான வரி விதிக்கப்படும். இந்த வரத்து புதிது.]

சூபர்டாக்ஸ் விகிதங்களும் மாறதப்பட்டிருக்கின்றன.

# இந்து விவாகச் சட்ட நடவடிக்கை விதிகள்

[இந்து விவாகச் சட்டம் (Hindu Marriage Act 1955) என்பது 1955-ம் வருடத்திய 25-வது மத்தியச் சட்டம். இச்சட்டம் அகில இந்தியாவிலும் 18-5-1955ல் அமுலுக்கு வந்தது. "இந்து விவாகச் சட்டம்" 1955 "வக்கீல்" இதழ் 4ல் விளக்கப்பட்டிருக்கிறது. இந்து விவாகச் சட்டத்தின் செக்ஷன் 14,21, இந்த ஷரத்துக்களால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை உபயோகித்து இச் சட்டப்படி கோர்ட்டில் போடக்கூடிய மனு முதலிய நடவடிக்கைகளைப் பற்றி சென்னை ஹைகோர்ட்டாரால் அடியில் கண்ட விதிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. கீழே இருப்பது இவ்விதிகளின் சுருக்கமே. இவ் விதிகள் 2-5-1956 சென்னை சர்க்கார் கெஜட் ரூல் சப்ளிமெண்ட் பாகம் IIல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.]

### அசல் மனுக்கள்

இந்து விவாகச் சட்டப்படி ஜில்லா கோர்ட்டில் போடக்கூடிய அடியில்கண்ட மனுக்கள் அசல் மனுக்களாக (Original Petitions) தாகல் செய்யப்படவேண்டும். அவையாவன:-

(1) செக்ஷன் 9-ன்படி தாம்பத்திய உரிமைகளைத் திரும்ப அடைவது பற்றிய மனு. (Restitution of Conjugal rights.) (2) செக்ஷன் 10(1)ன்படி தம்பதிகள் பிரிந்து வசித்துவர மனு (Judicial Separation.) (3) செக்ஷன் 10(2)ன்படி தம்பதிகள் பிரிந்து வசித்துவரவேண்டுமென்ற தீர்ப்பைரத்துசெய்ய மனு. (4) செக்ஷன் 11-ன்படி ஒரு திருமணம் செல்லாதென ஊர்ஜிதம் செய்ய மனு. (For declaring a marriage null and void.) (5) செக்ஷன் 12-ன்படி திருமணத்தை ரத்து செய்ய (annulment of a marriage by a decree of nullity.) (6) செக்ஷன் 13-ன்படி விவாக ரத்து செய்ய மனு (Divorce.) (7) செக்ஷன் 26-ன்படி குழந்தைகளின் சுவாதீனம், போஷணை, கல்வி சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்ய மனு.

மேலே கண்ட 7 வகை மனுக்களும் அசல் மனுக்களாக தாகல் செய்யப்பட வேண்டும். (குறிப்பு:-ஜில்லா கோர்ட்டில் போடப்படும் அசல் மனுவுக்கு கோர்ட் பீசுச் சட்டப்படி ரூ. 10 ஸ்டாம்பு ஒட்டப்படவேண்டும்.)

### மனுவில் சொல்லப்பட வேண்டிய விபரங்கள்.

ஒவ்வொரு மனுவிலும் கீழே கண்ட விவரங்கள் சொல்லப்பட வேண்டும். அவையாவன:-

(1) மனுதார், எதிர் மனுதார்களுடைய பெயர், தொழில், இருப்பிடம், விலாசம், அல்லது கோர்ட்டின் எல்லைக்குள் கடைசியாக தம்பதிகள் சேர்ந்து வசித்த இடம்; திருமணமான இடம், தேதி. (2) குழந்தைகள் இருந்தால், அவர்களுடைய பெயர், பிறந்த தேதி அல்லது வயது. (3) இதற்குமுன் தம்பதிகளுக்குள் இச் சட்டப்படி ஏதாவது நடவடிக்கைகள் நடந்திருந்தால் அவை விவரம். (4) தாம்பத்திய உரிமைகளைத் திரும்ப அடையவேண்டுமென்ற மனுவில், எதிர் மனுதார் மனுதாரை விட்டு எந்தத் தேதி முதல் எவ்விதமான சந்தர்ப்பத்தில் பிரிந்து வசிக்க ஆரம்பித்தார் என்பதுபற்றிய விவரம் (5) தம்பதிகள் பிரிந்து வசித்துவர கோர்ட் அனுமதி கேட்கும் மனுவில் - எந்தவிதமான தாம்பத்தியத் துரோகச் செயலுக்காக அவ்விதம் கேட்கப்படுகின்றது என்ற விபரம் இருக்கவேண்டும். உதாரணமாக—எதிர்மனுதார், மனுதாரை அநாதரவாக விட்டுவிட்டுப் போய்விட்டார் என்றால், எந்தத் தேதியில் எந்தச் சந்தர்ப்பத்தில் அவ்விதம் எதிர் மனுதார் போய்விட்டார் என்ற விபரம் வேண்டும். எதிர் மனுதார் மனுதாரைக் குரூரமாக நடத்தினர் என்றாவது அல்லது எதிர் மனுதார் வேறு நபருடன் விபசாரம் செய்தாரென்றாவது மனுவில் சொல்லப்பட்டால்—குறிப்பான குரூரச்செயல்களைப்பற்றியும், குறிப்பாக எந்த நபருடன் எதிர் மனுதார் விபசாரம் செய்தார் என்றும், எங்கே எந்த நேரத்தில் விபசாரம் நடந்தது என்பதுபற்றியும், யாருடன் விபசாரம் நடந்ததோ அவருடைய பெயரும் விலாசமும் குறிப்பிடப்பட வேண்டும். மனுக் கொடுக்கப்படுவதற்குமுன் குறைந்தது ஒரு வருட காலமாக எதிர் மனுதார், கடுமையான குஷ்ட ரோகத்தால் பீடிக்கப்பட்டிருப்பதாகவோ, அல்லது மேக ரோகத்தால் பீடிக்கப்பட்டிருப்பதாகவோ மனுவில் கண்டிருந்தால், அவ்வியாதி எப்பொழுது தோன்றியது; எவ்வித சிகிச்சை செய்யப்பட்டது; சிகிச்சை செய்த வைத்தியரின் பெயர்; மேக ரோகமாக இருந்தால் அது மனுதாரிடமிருந்து எதிர் மனுதாருக்குப் பரவவில்லை என்ற விபரங்கள் இருக்கவேண்டும். எதிர் மனுதார் மனுவுக்குமுன் குறைந்தது இரண்டு வருடங்களாவது சித்த சுவாதீனமில்லாமல் இருந்ததாக மனுவில் கண்டிருந்தால், எப்பொழுது முதல் சித்த சுவாதீனமற்ற நிலைமை ஏற்பட்டது; என்ன சிகிச்சைகள் செய்யப்பட்டன; சிகிச்சை செய்த வைத்தி

யரின் பெயர், விலாசம் முதலிய விவரங்கள் சொல்லப்படவேண்டும்.

### விவாகரத்து மனுவில்

(6) விவாகரத்து செய்து சொள்வதற்காகப் போடப்படும் மனுவில், எவ்வித சாம்பத்தியக் குற்றத்திற்காக விவாக ரத்து கேட்கப்படுகிறதோ, அல்லது எந்தக் காரணங்களுக்காக விவாகரத்து கேட்கப்படுகிறதோ அதன் பூரா விபரங்களும் மனுதாருக்குத் தெரிந்தவரையில் குறிப்பிடப்பட வேண்டும். உதாரணமாக:-எதிர் மனுதார் விபசாரம் செய்ததாக மனுவில் கண்டிருந்தால், எப்பொழுது, எந்த இடத்தில் யாருடன் விபசாரம் ஏற்பட்டது, அவருடைய பெயர் விலாசம் முதலிய விவரங்கள் மனுவில் சொல்லப்பட வேண்டும். எதிர் மனுதாருக்குச் சித்த சுவாதீனம் இல்லை என்றோ, எதிர் மனுதார் குஷ்டரோகத்தாலோ, மேக வியாதியாலோ பீடிக்கப்பட்டிருப்பதாகவோ மனுவில் சொல்லப்பட்டால், முன்பு சொல்லப்பட்டது போலவே எல்லா விபரங்களும் மனுவில் சொல்லப்பட வேண்டும். 7 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக எதிர் மனுதார் உயிருடன் இருப்பதுபற்றிய தகவல் தெரியாத காரணத்தினால் விவாகரத்து கேட்கப்பட்டால், கடைசியாக தம்பதிகள் சேர்ந்து வசித்துவந்த இடம், கடைசியாக எந்த இடத்தில் எப்பொழுது எதிர் மனுதார் காணப்பட்டார், எதிர் மனுதார் எங்கே இருக்கிறார் என்பதை விசாரிக்க மனுதார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் விபரம் முதலியவை குறிப்பிடப்படவேண்டும்.

### திருமண காலத்தில் எதிர் மனுதார் (மனைவி) மனுதாரல்லாது வேறு ஒருவர் மூலம் கர்ப்பமாக இருந்த காரணத்தினால், திருமணம் செல்லாதென போடப்படும் மனுவில்

இந்து விவாகச் சட்டத்தின் செக்ஷன் 12(d) ஷரத்தின்படி மேற்கண்ட காரணத்தினால் திருமணமே செல்லாதென போடப்படும் மனுவில் - எப்பொழுது இவ்விஷயம் கண்டுபிடிக்கப்பட்டது; அவ்விஷயம் கண்டுபிடிக்கப்பட்டபிறகு மனுதார் சம்மதித்து எதிர் மனுதாருடன் (அதாவது மனைவியுடன்) புணர்ச்சி செய்திருக்கிறாரா இல்லையா என்ற விபரமும் குறிப்பிடப்படவேண்டும்.

### குழந்தைகளுடைய போஷணை— ஜீவனாம்சம்—செலவு தொகை.

ஒவ்வொரு மனுவிலும் கடைசியில், மனுதார் கேட்கும் பரிகாரங்கள் எவை என்று குறிப்பிடப் படுவதுடன், தம்பதிகளுடைய குழந்தைகள் யார் வசம் இருக்க வேண்டும், குழந்தைகளுடைய போஷணை, ஜீவனாம்சம், செலவு தொகை இவ் விஷயங்களைப் பற்றியும் மனுதார் என்ன பரிகாரங்கள் கேட்கிறார் என்பதும் கண்டிருக்க வேண்டும். எதிர் மனுதாரிடமிருந்து தமக்கு ஜீவனாம்சம் கிடைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டால், எதிர் மனுதாரின் சொத்து விபரம் மதிப்பு, வருட வருமானம் முதலிய விபரங்களும் சொல்லப்பட வேண்டும்.

### ஸ்டேட்மெண்டில்

எதிர் மனுதார் கொடுக்கும் ஆட்சேபனை ஸ்டேட்மெண்டிலும் முன் சொல்லப்பட்ட விஷயங்களைப் பற்றிய விபரங்கள் முடிந்தவரை சொல்லப்படவேண்டும்.

### திருமணமாகி 3 வருடங்களுக்குள்ளேயே விவாக ரத்து மனுப் போட்டால்

இந்து விவாக சட்டத்தின் செக்ஷன் 14ன் படி சாதாரணமாகத் தம்பதிகளுக்குள் திருமணமாகி 3 வருடங்களுக்குள் எவரும் விவாக ரத்துக்காக மனுப்போட முடியாது. இருந்தாலும் ஹைகோர்ட்டார் ஏற்படுத்தும் விதிகளுக்குட்பட்டு, கோர்ட்டின் அனுமதி பெற்றுக்கொண்டு மூன்று வருடங்களுக்குள்ளேயே விவாக ரத்து மனுப் போடலாம். அதாவது மனுதார் அசாதாரணமான கஷ்ட நிலைமையில் இருந்தாலும் சரி, அல்லது எதிர்மனுதார் அசாதாரணமான துன்மார்கியாக இருந்தாலும் சரி, மேற்கண்டபடி மூன்று வருடங்களுக்குள்ளேயே விவாக ரத்து மனுப்போடலாம். இதுவிஷயமாக இப்போது ஹைகோர்ட்டாரால் செய்யப்பட்டிருக்கும் விதிகளின்படி— மனுவுடன் மேற்கண்ட அசாதாரண விஷயங்களைப்பற்றி ஒரு பிரமாணப் பத்திரிகை தாகல் செய்யப்படவேண்டும்.

### ஹைகோர்ட்டுக்கு அப்பீல்.

ஜில்லா கோர்ட்டின் தீர்ப்பின்பேரில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டால் ஹைகோர்ட்டு அப்பீல் விதிகளின்படி அப்பீல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

[குறிப்பு:— மேலே இருப்பது இந்து விவாகச்சட்ட நடவடிக்கை விதிகள். இந்து விவாகச் சட்டம் (1955) "வக்கீல்" பத்திரிகை 1955 இதழ் 4-ல் விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது.]

சுவடிகள் காப்பகம் 187798 சென்னை-600 0



# வழக்கும் தீர்ப்பும்

*[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும்.]*

## சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் - 1954-ம் வருடத்திய திருத்தச் சட்ட ஷரத்துக்களில் சில, மடங்கள் சம்பந்தப்பட்ட வரையில் செல்லா.

[ஆதாரம்:- சென்னை ஹைகோர்ட்டு - 69 லா வீக்லி - 337]

சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் என வழங்கும் 1951 – ம் வருடத்திய சென்னை இந்து மத – தர்ம பரிபாலனச் சட்டத்தின் சில ஷரத்துக்கள் செல்லாதென முதலில் சென்னை ஹைகோர்ட்டாரும் பிறகு சர்க்கார் அப்பீல் செய்ததன் பேரில் சுப்ரீம் கோர்ட்டாரும் தீர்ப்பளித்தனர். இவ்விதம் தீர்ப்பு ஏற்பட்டது தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள ஷிரூர் மடாதிபதி அவர்களின் வழக்கின் பேரில். ("வக்கீல்" - 1954 ஏப்ரல் இதழ் பக்கம் 12 பார்க்கவும்.) சுப்ரீம் கோர்ட்டாரின் தீர்ப்புக்குப் பிறகு சென்னை சட்ட சபையால் அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் பல ஷரத்துக்கள் 1954ல் திருத்தி அமைக்கப்பட்டன. (1954–ம் வருடத்திய 27-வது சென்னைச் சட்டம். "வக்கீல்" 1954 இதழ் 10 பக்கம் 7 பார்க்கவும்.) சுப்ரீம் கோர்ட்டாரின் தீர்ப்பில் இச்சட்டத்தின் எந்த எந்த ஷரத்துக்கள் நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்ட ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக இருக்கிறதென்று சொன்னார்களோ அந்த ஷரத்துக்களெல்லாம் சென்னைச் சட்ட சபையால் திருத்தி அமைக்கப்பட்டன. அதாவது, ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக இருந்த அம்சங்களை நீக்கிவிடுவதாக நினைத்து திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்விதம் சென்னை சட்ட மன்றத்தால் திருத்தம் செய்யப்பட்ட பிறகு கூட, அந்த ஷரத்துக்களில் சில செல்லுமா என்ற பிரச்னை சமீபத்தில் வேறு சில வழக்குகளில் எழுந்தது. இவ்வழக்குகளை எல்லாம் சேர்த்து விசாரணை செய்த உயர் நீதிபதி ராஜகோபாலன் அவர்களும் உயர் நீதிபதி ராஜகோபாலய்யங்கார் அவர்களும் அளித்திருக்கும் இத்தீர்ப்பின்படி, மடாலயங்கள் சம்பந்தப்பட்ட வரையில், திருத்தம் செய்யப்பட்ட அறநிலையப் பாதுகாப்புச் சட்ட ஷரத்துக்களிலும் சில செல்லாதென ஏற்படுகிறது.

திருத்தச் சட்ட ஷரத்துக்களும் செல்லாதென சென்னை ஹைகோர்ட்டில் பத்து 'ரிட்' மனுக்கள் போடப்பட்டன. அதாவது உடுபியிலிருக்கும் எட்டு மடங்களின் மடாதிபதிகள் ஒவ்வொருவரும் தனித்தனியே ஒவ்வொரு மனுவும், இவர்கள் சேர்ந்து நிர்வகிக்கும் ஸ்ரீ கிருஷ்ண தேவரா மடத்திற்காக ஒரு மனுவும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் மடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமி அவர்களால் ஒரு 'ரிட்' மனுவும் தாகல் செய்யப்பட்டன. இந்த பத்து 'ரிட்' மனுக்களும் சேர்ந்து விசாரிக்கப்பட்டு ஒரே தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

மடங்களும் மடாதிபதிகளும் சம்பந்தப்பட்ட வரையில்தான், 1954-ம் வருடத்திய சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்டத் திருத்தங்கள் செல்லுமா என்பதைப் பற்றியே உயர் நீதிபதிகள் இத்தீர்ப்பில் அபிப்பிராயம் கொடுத்திருக்கின்றனர். கோயில்கள் சம்பந்தப்பட்ட வரையில் இத்தீர்ப்பில் தாங்கள் யாதொரு அபிப்பிராயமும் சொல்லவில்லை என்பதையும் உயர் நீதிபதிகள் தங்களுடைய தீர்ப்பின் பீடிகையிலே குறிப்பிட்டிருக்கின்றனர்.

## செக்ஷன் 21-21A செல்லாது. மடங்களுக்குள் அதிகாரிகள் நுழைவது பற்றி.

1951-ம் வருடத்திய அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் செக்ஷன் 21 என்பது மடங்கள் உள்பட எல்லா மதஸ்தாபனங்களிலும் கமிஷனர் முதலிய சர்க்கார் அதிகாரிகள் நுழைந்து இச்சட்டத்தால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தலா மென்பதுதான். மத விஷயங்களிலும் மத விவகாரங்களில் நிர்வாக விஷயங்களிலும் மக்களுக்குச் சுதந்தரமளிக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகள் 25–26 என்ற ஷரத்துக்களுக்கு இது முரணாக இருப்பதால் இது செல்லாதென சுப்ரீம் கோர்ட்டார் முன்பு தீர்ப்பளித்தனர். ஆனால் நியாயமான சில நிபந்தனைகளை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு அதிகாரமும் இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டாரின் தீர்ப்புக்குப் பிறகு அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் செக்ஷன் 21 ஐ சென்னை சட்ட சபையார் திருத்தி அமைத்ததுடன் செக்ஷன் 21A என்ற ஒரு புதிய ஷரத்தையும் சட்டத்தில் சேர்த்தனர். அதாவது, மதஸ்தாபனங்களுக்குள் அதிகாரிகள் நுழையுமுன், அந்த ஸ்தாபனத்தின் டிரஸ்டிகள் அல்லது மடாதிபதிகளுக்கு முன் அறிவிப்புக் கொடுக்க 'முடிந்தால்' அவ்விதம் செய்ய வேண்டுமென்றும், மேலும், அதிகாரிகள் அந்த மதஸ்தாபனத்தின் ஆசாரணைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் உட்பட்டு நடப்பதுடன், மடங்கள் சம்பந்தப்பட்ட வரையில் மடாதிபதிகளுடன் இவ்வதிகாரிகள் பழகும்போது அம்மடத்தின் பழக்க வழக்கங்களை அனுசரித்து மடாதிபதிக்குரிய மரியாதையுடன் இவர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்றும் இத் திருத்த ஷரத்துக்கள் வற்புறுத்தின. இவ்விதம் திருத்தம் செய்தும்கூட இந்த ஷரத்துக்கள் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணாக இருப்பதால் மடங்கள் சம்பந்தப்பட்ட வரையில் இவை செல்லாதென இத்தீர்ப்பில் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட் டிருக்கின்றனர். மடாலயங்களுக்குள் அதிகாரிகள் நுழைவதற்கு முன்பு "கூடுமானல், முன் அறிவிப்பு செய்து" விட்டுப் போக வேண்டும் என்று செக்ஷன் 21–ன் வாசகத்தைத் திருத்தி அமைத்தது ஒரு நியாயமான நிபந்தனையை ஏற்படுத்துவதாகாதென உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

## மடாலயங்களின் உபரி வருமானத்தைச் செலவு செய்யும் விஷயமாய் மடாதிபதிகள் கமிஷனருடைய ஆலோசனையைக் கேட்க வேண்டுமென்ற ஷரத்தும் செல்லாது. செக்ஷன் 30 (2) - 31 இவையும் செல்லா.

மடங்களுக்கு அவசியமான செலவுகள் போக உபரியாக இருக்கும் வருமானங்களை எந்தெந்த விஷயங்களுக்காக மடாதிபதிகள் செலவு செய்யலாமென்று செக்ஷன் 30 (1)ல் இருக்கிறது. அதாவது சிடர்கள், யாத்ரிகர்கள், வழிபாடு செய்பவர்கள் இவர்களுடைய ஆரோக்கியம், பந்தோபஸ்து, சௌகரியங்கள் இவைகளுக்கு ஏற்பாடு செய்யவும்; அர்ச்சகர்கள், அத்தியாபகர்கள், வேதபாராயணம் செய்பவர்கள், ஓதுவர்கள் இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும் செலவு செய்யலாமென்று இருக்கிறது. அடுத்த ஷரத்தில், அதாவது செக்ஷன் 30 (2) என்ற ஷரத்தில் இவ்விதம் மடாதிபதிகள் செலவு செய்யும்போது, கமிஷனருடைய உத்தரவுகளின்படி அவற்றைப் பின்பற்றியே இவர்கள் இச்செலவுகளைச் செய்ய வேண்டுமென்று (.."Shall be guided by such general or special instructions as may be given by the commissioner"..) இருந்தது. இது ஒரு நியாயமான கட்டுப்பாடு அல்ல என்றும், ஆகையால் மடாதிபதிகளின் ஜீவாதார உரிமைக்கு முரணாக இருக்கும் இந்த ஷரத்து செல்லாதெனவும் ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டார் ஷிரூர் மடத்து வழக்கில் தீர்ப்பளித் திருக்கின்றனர். இந்தக் கட்டுப்பாட்டை நியாயமானதாகச் செய்யவே சென்னை சட்ட சபையானது, இந்த ஷரத்தின் வாசகத்தைக் கொஞ்சம் மாற்றியது. அதாவது, இவ்விதம் செலவு செய்யும்போது மடாதிபதிகள் கமிஷனருடைய உத்தரவுகளை "சரியாகக் கவனித்து"ச் (.."Shall have due regard to such general or special instructions as may be given by the commissioner"....) செலவு செய்யவேண்டுமென்று திருத்தம் செய்தது. இதுவும் ஒரு நியாமற்ற நிபந்தனை என்றும் ஆகையால் இந்த திருத்த ஷரத்தும் மடாதிபதிகளைக் கட்டுப்படுத்தாதெனவும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட் டிருக்கின்றனர்.

செக்ஷன் 31 என்பது, மடங்களின் அவசியமான செலவுகளும், மேலே செக்ஷன் 30ல் குறிப்பிடப்பட் டிருக்கும் செலவுகளும் போக, இன்னும் பாக்கி இருக்கும் வருமானங்களை மத விஷயமான சில பொதுவான

செலவுகளுக்காக டிப்டி கமிஷனருடைய அனுமதி பெற்று, மடாதிபதிகள் செலவு செய்யலாமென முன்பு இருந்தது. இது செல்லாதென சுப்ரீம் கோர்ட்டார் ஷிரூர் மடத்து வழக்கில் தீர்ப்பளித்தனர். இந்த செக்ஷனின் வாசகங்கள் சென்னை சட்ட சபையால் அடியோடு மாற்றி அமைக்கப் பட்டன. இதுவும் செல்லாதென இவ்வழக்கில் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட் டிருக்கின்றனர்.

## பாத காணிக்கை

மடாதிபதிகளுக்குக் கொடுக்கப்படும் பாத காணிக்கைகள் விஷயமாக ஏற்கனவே செக்ஷன் 55ல் இருந்த நிபந்தனைகள் செல்லாதென சுப்ரீம் கோர்ட்டார் தீர்ப்பளித்திருக்கின்றனர். 1954ல் இந்த ஷரத்தும் திருத்தி அமைக்கப்பட்டது. இத்திருத்த ஷரத்தில் மடாதிபதி அவர்களுக்குச் சொந்த முறையில் கொடுக்கப்படும் பாத காணிக்கைகளைப்பற்றி எவ்வித ஷரத்தும் சேர்க்கப்படவில்லை. அவ்வித பாத காணிக்கைகளை மடாதிபதிகள் தங்கள் இஷ்டப்படிச் செலவு செய்வதில் இப்போது எவ்வித கட்டுப்பாடும் இல்லை. ஆனால் மடத்தின் தலைவர் என்ற ஹோதாவில் அதாவது மடம் என்ற ஸ்தாபனத்திற்காக மடாதிபதியிடம் கொடுக்கப்படும் பாத காணிக்கைகளைப்பற்றி மடாதிபதியானவர் சரியான கணக்கு வழக்குகள் வைத்துக் கொள்ளவேண்டுமென்றும், அத்தொகைகளை அம்மடத்தின் பழக்க வழக்கங்களை அனுசரித்துச் செலவு செய்ய வேண்டுமென்றும் செக்ஷன் 55ன் வாசகம் இப்போது திருத்தப்பட் டிருக்கிறது. இந்த ஷரத்து செல்லுமென உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட் டிருக்கின்றனர்.

## விதி 10 செல்லாது. மடங்களின் சிப்பந்திகள் சம்பந்தமானது

சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் செக்ஷன் 100 (2)y என்ற ஷரத்தை அனுசரித்துச் சென்னை சர்க்காரால் செய்யப்பட்டிருக்கும் விதிகளில், விதி 10 என்பது மடங்களின் உத்தியோகஸ்தர்கள் சிப்பந்திகள் இவர்களைப் பற்றியது. இவர்களுடைய சம்பளம், படி, முதலியவற்றைப்பற்றி மடாதிபதியானவர் ஒரு ஷெடியூல் தயாரித்து அது கமிஷனரால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும், இந்த ஷெடியூலை கமிஷனருடைய அனுமதியின்றி மடாதிபதிகள் மாற்றக் கூடாதென்றும் விதி 10ல் இருக்கிறது. மடங்கள் சம்பந்தப்பட்ட வரையில், இது மடாதிபதிகளின் ஜீவாதார உரிமையைப் பறிக்கும் ஒரு நிபந்தனை என்றும் ஆகையால் இவ்விதி மடாதிபதிகளைக் கட்டுப்படுத்தாதென்றும் இவ்வழக்கில் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட் டிருக்கின்றனர்.

## 'கண்ட்ரிபூஷன்' அல்லது கட்டணங்களை விதிக்கும் செக்ஷன் 76 (1) செல்லும்

ஏற்கனவே செக்ஷன் 76 (1)ல் அறநிலைய ஸ்தாபனங்கள் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டியதாக வற்புறுத்திய தொகையானது ஒரு 'வரி' (Tax) என்றும், இவ்வித வரியை விதிக்க ராஜ்ய சட்ட சபைக்கு அதிகாரமில்லை என்றும் முன் வழக்கில் சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப் பட்டனர். மத தர்ம ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் 'வரி' (Tax) விதிக்க ராஜ்ய சட்ட சபைகளுக்கு அதிகாரமில்லையே ஒழிய இது சம்பந்தகத் தேவையான பீசு அல்லது 'கட்டணம்' (Fees) விதிக்க அரசியல் அமைப்புச் சட்டம் இடம் கொடுக்கிறது. 'வரி' (Tax) என்பதற்கும் 'கட்டணம்' (Fees) என்பதற்கும் பல முக்கியமான வித்தியாசங்கள் இருக்கின்றன. முக்கியமாக, ஒரு குறிப்பிட்ட செலவுக்காகப் போதுமான அளவு தொகையைக் கொடுக்கும்படி விதிப்பதுதான் பீசு அல்லது கட்டணம் எனப்படும். அறநிலையங்களுக்கும் தர்ம ஸ்தாபனங்களுக்கும் சர்க்கார் ஊழியர்கள் செய்யும் சேவைக்குப் போதுமான தொகைகளையும், கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கான செலவுக்காகவும் ஒரு கட்டணம் விதித்து செக்ஷன் 76 (1) - 76 (2) இந்த ஷரத்துக்களின் வாசகங்கள் 1954ல் சென்னை சட்ட சபையால் திருத்தி அமைக்கப்பட்டன. இது செல்லுமென உயர் நீதிபதிகள் அப்பிராயப்பட்டனர். இவ்விதம் வசூலான தொகைகளைத் தனிக் கணக்காக வைத்து, செலவு போக பாக்கித் தொகைகளை கமிஷனர் பணம் தேவையுள்ள வேறு ஏழை மதஸ்தாபனங்களைப் பழுது பார்க்கவும் புதுப்பிக்கவும் உபயோகப் படுத்தலாமென்று சேர்க்கப்பட்ட செக்ஷன் 76 (5) என்ற ஷரத்து மட்டில் செல்லாதென உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். ஏனென்றால் தேவைக்கு மேல் அதிகமாக பீசு அல்லது கட்டணம் விதிக்கவே சட்ட சபைக்கு இது விஷயத்தில் அதிகாரமில்லை.

மைனருடைய பால்ய விவாகத்திற்காக வாங்கப்பட்ட கடனை அடைக்கத் தாய் மாமன் மைனருடைய சொத்துக்களை விற்ருர். இது செல்லுமா?

[ஆதாரம்:— ஆல் இந்தியா ரிபோர்ட்டர் — 1956 பம்பாய் — 250.]

லெக்ஷ்மணன் என்பவர் 1938ல் இறந்தார். அவருக்கு மூன்று ஆண்மக்களும் மனைவியும் இருந்தார்கள். ஆண்மக்கள் மூவரும் மைனர்கள். இம்மைனர்களுக்கு முதலில் தாயாரே கார்டியனுக இருந்து சொத்துக்களை நிர்வாகம் செய்து வந்தாள். தாயும் 1943ல் இறந்தாள். தாயார் இறந்த பிறகு மைனர்களுடைய சொத்துக்களை, அவர்களுடைய தாய் மாமன் ஆனந்தராவ் என்பவர் நிர்வாகம் செய்து வந்தார். முதல் மைனர் ராஜாராம் என்பவனுக்கு அவ்வருடத்திலேயே திருமணம் நடந்தது. அதாவது, 18 வயது பூர்த்தியாவதற்கு முன்பே ராஜாராம் விவாகம் செய்து கொண்டார். இந்த விவாகத்திற்காகக் கடன்கள் வாங்கவேண்டி யிருந்தது. இக்கடன்களை அடைக்க மைனர்களுடைய சொத்துக்களை கார்டியனுக நிர்வாகம் செய்து வந்த தாய் மாமன் ஆனந்தராவானவர் சில சொத்துக்களை 27-10-1943ல் கிரயம் செய்து கொடுத்தார்.

மைனர் ராஜாராம் 18 வயது பூர்த்தியாகி மேஜரானதும், தன்னுடைய சொத்துக்களைத் தாய் மாமன் கிரயம் செய்தது செல்லாதெனவும் அது தன்னைக் கட்டுப்படுத்தாதெனவும் அச்சொத்துக்கள் தமக்குத் திரும்பக் கிடைக்க வேண்டுமென்றும் கிரயம் வாங்கியவர் மீது தாவா தொடர்ந்தார். முதல் கோர்ட்டில் தாவா தள்ளப் பட்டது. மைனர்களுக்குத் தாய் மாமன் சட்டபூர்வமான கார்டியன் அல்ல என்றாலும், நடை முறையில் அவர் கார்டியனுக இருந்து வந்தபடியால் (De facto guardian) மைனரைக் கட்டுப் படுத்தக் கூடிய அவசியமான விஷயங்களுக்காக மைனருடைய சொத்துக்களைப் பராதீனம் செய்ய இவ்வித கார்டியன்களுக்கும் அதிகாரமிருக்கிற தென்றும்; மைனருடைய கலியாணத்திற்காக வாங்கப்பட்ட கடன்களை தீர்ப்பது ஒரு அவசியமான விஷயம்தான் என்றும் ஆகையால் தாய் மாமன் செய்து கொடுத்த கிரயசாசனம் செல்லுமென்றும், அது மைனரைக் கட்டுப் படுத்து மென்றும் முதல் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு வாதியின் தாவா தள்ளப் பட்டது.

வாதி ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். தாய் மாமன் ஆனந்தராவ் என்பவர் நடைமுறையில் கார்டியனுக இருந்து வந்தாலும் மைனருடைய நிலத்தை அவர் கிரயம் செய்ய அவசியம் ஏற்படவில்லை என்று ஜில்லா நீதிபதி அபிப்பிராயப்பட்டு, தாய் மாமன் செய்த கிரய சாசனம் செல்லாதெனத் தீர்ப்பளித்தார்.

சொத்துக்களைக் கிரயம் வாங்கியவர் அத் தீர்ப்பின் பேரில் பம்பாய் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி ஷா அவர்கள், தாய் மாமன் செய்த கிரயம் செல்லாதென அபிப்பிராயப் பட்டார். ஏனென்றால் — மைனர் ராஜாராமுக்குக் கலியாணம் செய்வித்ததே சட்ட விரோதமான ஒரு காரியமாகும். 1929-ம் வருடத்திய பாலிய விவாகத்தடைச் சட்டப்படி (Child Marriage Restraint Act - 1929) ஆண்கள் 18 வயது பூர்த்தியான பிறகுதான் விவாகம் செய்து கொள்ளலாம். அதற்குமுன் விவாகம் செய்து கொள்ளுவது அச்சட்டப்படி ஒரு குற்றமாகும். இக்குற்றமான செய்கையைச் செய்வதற்காகவே மைனரின் தாய் மாமன் கடன் வாங்கினர். அக்கடனை அடைக்க மைனருடைய சொத்துக்களைக் கிரயம் செய்ய கார்டியனுக்கு அதிகாரமில்லை. தாய் மாமன் செய்த கிரயம் செல்லாதென்றும், மைனரைக் கட்டுப்படுத்தாதென்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். கிரயதாருடைய அப்பீல் தள்ளப்பட்டது. மைனர் வாதிக்குச் சொத்துக்கள் திரும்பின.

ஆறு மனைவிகளை மணம் செய்து கொண்ட இந்துப் பணக்காரர் மூன்று மனைவிகளை விட்டு விட்டு இறந்தார். அவர் இறந்த பிறகு மூத்த விதவை சுவீகாரம் செய்துகொண்டாள். மூன்ருவது மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இது கணவனுக்குப் பிறந்த குழந்தையா? ஒரு மனைவி கர்ப்பமாக இருக்கும்போது வேறு மனைவி சுவீகாரம் செய்து கொள்ளலாமா? மூன்று மனைவிகளுக்கும், சுவீகார மகனுக்கும், சொந்த மகனுக்கும் பாகம் எப்படி?

[ஆதாரம்:—பம்பாய் ஹைகோர்ட்டு - ஆல் இந்தியா ரிபோர்ட்டர் 1956 பம்பாய் 128.]

இப்பம்பாய் வழக்கில் பல விசித்திரமான சம்பவங்களும் சட்டப் பிரச்னைகளும் எழுந்

தன. பம்பாய் ராஜ்யத்தைச் சேர்ந்த பீஜப்பூர் ஜில்லாவில் மிக தனவந்தராக இருந்த சம்ப ஸப்பா என்ற இந்து ஒருவர் 8-1-1944ல் இறந்தார். இறக்கும்போது அவருக்கு வயது சுமார் 66. (வாதி 76 என்று சொன்னுள்!) இவர் 6 மனைவிகளைத் திருமணம் செய்து கொண்டிருந்தாலும், அவர் இறக்கும் போது மூன்று மனைவிகளேதான் உயிருடனிருந்து விதவைகளானார்கள். ஆனல் அவருக்கு ஆண் மக்கள் இல்லை.

இவ்விதவைகளில் மூத்தவளான நாகம்மா என்பவள், கணவன் இறந்த 20 நாட்களில் தன்னுடைய சகோதரி மகனைச் சுவீகாரம் எடுத்துக் கொண்டாள். இவ்விதம் அவள் சுவீகாரம் செய்து கொள்ளுவதை அனுமதித்து அவளுடைய கணவன் உயிருடனிருக்கும் போதே வெகு வருடங்களுக்கு முன்பு ஒரு அனுமதிப்பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தார். மூன்று விதவைகளும் சில நாட்கள் ஒன்ருக வசித்து வந்தாலும், நாலைந்துமாதங் கழித்து மூன்ருவது விதவையான வெங்கம்மா என்பவள் தன்னுடைய பெற்ருேர் இருக்கும் ஊருக்குப் போய் விட்டாள்.

சுவீகாரம் செய்து கொண்ட முதல் விதவையானவள், தன்னுடைய கணவன் சொத்துக்களைத் தன்னுடைய சுவீகார மகன் பெயருக்குப் பட்டா மாற்றும்படி கலெக்டருக்கு மனுப் போட்டாள். இனித்தான் இவ்வழக்கில் சிக்கலான சம்பவங்கள் ஆரம்பித்தன. தன் பெற்ருேர் வீடுபோன மூன்ரும் மனைவியானவள் தான் அப்பொழுது கர்ப்பமாக இருப்பதாகவும், முதல் மனைவி சுவீகாரம் செய்து கொண்டதாகச் சொல்லுவது பொய் என்றும், எப்படியும் தாம் கர்ப்பமாக இருக்கும்போது எவ்வித நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப் படாமல் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்றும் ஆட்சேபனை மனுச் செய்து கொண்டாள். பிறகு தனக்கு 4-10-1944ல் ஒரு ஆண் குழந்தை பிறந்து விட்டதாகவும், சங்கப்பா என்று பெயர் சூட்டப்பட்ட அக்குழந்தையின் பேரில்தான் பட்டா மாற்றவேண்டுமென்றும் 19-10-1944ல் அவள் கலெக்டருக்கு மனுவும் செய்து கொண்டாள். கலெக்டர் விசாரணை செய்து சுவீகார மகன், சொந்தமகன், இருவர் பேரிலும் பட்டாக்களை மாற்றினர்.

முதல் மனைவி 1946ல் கோர்ட்டில் தாவா செய்தாள். அவள், தான் செய்து கொண்ட சுவீகார மகனுக்குத்தான் சொத்துக்கள் பாத்யப்பட்டவை என்றும், கணவன் இறக்கும் போது மூன்ருவது மனைவியானவள் கர்ப்பமாக இருந்ததாகச் சொல்லுவது புரளி என்றும், மூன்ருவது மனைவிக்கு குழந்தையே ஒன்றும் பிறக்கவில்லை என்றும், வேறு ஏதோ ஒரு குழந்தையை எடுத்து அவள் ஆள் மாருட்டம் செய்வதாயும், அப்படி அவளே குழந்தை பெற்றது உண்மையானல் அக்குழந்தை அவளுடைய கணவனுக்குப் பிறந்திருக்க முடியாதென்றும், விபசாரத்தில்தான் பிறந்திருக்க வேண்டுமென்றும் முதல் மனைவி தன்னுடைய தாவாவில் குறிப்பிட்டிருந்தாள்.

மூன்ருவது மனைவி கட்சியாடினள். பிறந்த குழந்தை தன்னுடையதுதான் என்றும் அது தன் கணவனுக்குப் பிறந்ததுதான் என்றும் சொல்லுவதுடன் தான் கர்ப்பமாக இருந்த சமயத்தில் முதல் மனைவி சுவீகாரம் செய்து கொண்டதே சட்டப்படி செல்லாதென்பதும் அவளுடைய கட்சி. முதல் கோர்ட்டில் சுவீகாரம் செல்லாதென தீர்ப்பாகி விட்டது. அதன் பேரில் பம்பாய் ஹைகோர்ட்டில் அப்பீல் நடந்தது. மூன்ருவது மனைவி வெங்கம்மாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது உண்மை என உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். ஆனல் இக்குழந்தை அவளுடைய கணவன் மூலம் உற்பத்தியான குழந்தையா என்ற பிரச்னை எழுந்தது. கணவன் 8-1-1944ல் இறந்தாலும் அவர் 21-12-1943 முதல் கடுமையான வியாதியினல் பீடிக்கப்பட்டிருந்தார். மூன்ருவது மனைவிக்குக் குழந்தை பிறந்தது 4-10-1944ல். அதாவது, கணவனுடன் அவள் சேர்ந்திருப்பது சாத்தியமாக இருந்த நாளிலிருந்து 290 நாட்களுக்குப் பிறகே குழந்தை பிறந்தது.

இந்திய ருசுச் சட்டத்தில் (The Indian Evidence Act) ஒரு விதி இருக்கிறது. செக்ஷன் 112 என்னவென்ருல்:—

ஒரு ஸ்திரீக்குக் கணவன் இருக்கும்போது குழந்தை பிறந்தாலும் சரி; அல்லது கணவனுடன் விவாகரத்து செய்த பிறகோ அல்லது கணவன் இறந்த பிறகோ 280 நாட்களுக்குள் அவளுக்குக் குழந்தை பிறந்தாலும் சரி அக்கணவன் தான் அக்குழந்தையின் சட்ட பூர்வமான தகப்பனைக் கட்டாயமாகப் பாவிக்கப்படும். ஆனல் அக்குழந்தையின் தாய் அதற்குள் வேறு ஒருவரையும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்க வேண்டும். மேலும் குழந்தையானது வயிற்றில் ஜனித்திருக்கக் கூடிய காலங்களில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் 'சந்திக்க'வே இல்லை என்று ருசுவானல், மேலே சொல்லப்பட்ட விதி பொருந்தாது—என்பதுதான் ருசுச்

சட்டத்தின் செக்ஷன் 112. இவ்வழக்கில் கணவன் இறந்த தேதியிலிருந்து 280 நாட்களுக்குள் மூன்றாவது மனைவிக்குக் குழந்தை பிறந்து விட்டது. ஆனால் மூன்றாவது மனைவிக்கு மாதவிடாய் ஏற்பட்ட 2-12-1943 தேதியிலிருந்து 307 வது நாள் தான் குழந்தை பிறந்திருக்கிறது. மேலும் 21-12-1943 முதல் கணவனுக்குக் கடுமையான வியாதி ஏற்பட்டு விட்டதென்றும், அத்தேதிக்குப் பிறகு அவர் மனைவியுடன் சேர்ந்திருப்பது முடியாத காரியமென்றும் இவ்வழக்கில் வைத்திய நிபுணர்கள் சாட்சியம் கொடுத்தனர். ஆனால் கர்ப்ப காலம் என்பது எவ்வளவு நாட்கள்? சிற்சில சமயங்களில் கருத்தரித்து 315—322 நாட்கள் வரையில்கூட கர்ப்ப காலம் நீடிக்குமென வைத்திய சாஸ்திர நிபுணர் டாக்டர் லையான் என்பவர் தம்முடைய வைத்திய நூலில் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார். இவ்வழக்கில் குழந்தை பிறந்தது அக்கெடுவுக்குள் தான் இருக்கிறது. மேலும் குழந்தையைப் பெற்ற மூன்றாவது மனைவியின் நடத்தையைப்பற்றி சந்தேகம் வரும் விதமாகக்கூட எவ்வித சாட்சியமும் இல்லை என்றும், அக்குழந்தை வெங்கம்மாவுக்கும் அவளுடைய கணவருக்கும் ஜனித்த குழந்தைதான் என்றும் உயர் நீதிபதிகள் முடிவு செய்தனர்.

அடுத்த பிரச்னை முதல் மனைவி செய்து கொண்ட சுவீகாரத்தைப்பற்றி. ஒருவருக்குச் சொந்த மகன் (அவுரசபுத்திரன்) இல்லாவிட்டால்தான் அவர் சுவீகாரம் செய்து கொள்ளலாமென்பது சட்டம். கணவன் இறந்து விட்டாலும் அவருக்கு ஒரு ஆண் மகன் இருந்தால், அவருடைய மனைவிக்குச் சுவீகாரம் செய்து கொள்ள உரிமை கிடையாது. ஆனால் மனைவி கர்ப்பமாக இருக்கும்போது கணவன் சுவீகாரம் செய்து கொள்ளலாமா? மனைவியின் வயிற்றிலிருப்பது ஒரு ஆணாகவும் இருக்கலாம்; பெண்ணாகவும் இருக்கலாம். ஆண் மகன் பிறந்து விட்டால் கணவன் எடுத்துக் கொண்ட சுவீகாரம் செல்லுமா? அதைப் போலவே கணவனுடைய மனைவி ஒருவள் கர்ப்பமாக இருக்கும் சமயத்தில், வேறுமனைவியானவள் சுவீகாரம் செய்து கொள்ளுவது செல்லுமா? என்ற பிரச்னைகளை உயர் நீதிபதிகள் இவ்வழக்கில் ஆராய்ந்தனர். இந்து சட்டத்தில் கர்ப்பத்திலிருக்கும் ஆண் குழந்தைக்கும் சொத்துரிமைகள் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், சுவீகாரம் சம்பந்தப்பட்ட வரையில் சட்டம் இதுதான். அதாவது மனைவி கர்ப்பமாக இருக்கும்போதுகூட கணவன் சுவீகாரம் செய்துகொள்ள உரிமை உள்ளவர். அதைப் போலவே, ஒரு மனைவி கர்ப்பமாக இருக்கும்போதுகூட வேறு மனைவி செய்து கொண்ட சுவீகாரம் செல்லும் என உயர் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர்.

மூன்றாவதாக இறந்த சம்பஸப்பாவின் சொத்துக்களுக்கு யார் யார் வார்சுகள்? ஒவ்வொருவருக்கும் பாகம் எவ்வளவு? என்ற பிரச்னை, இறந்த இந்த இந்துவுக்கு மூன்று மனைவிகளும், ஒரு சுவீகார மகனும், ஒரு சொந்த (அவுரச) மகனும் இருந்தனர். இந்து ஸ்திரீகள் வார்சுரிமைச் சட்டப்படி இறந்தவருடைய மனைவிக்கு ஆண் மகனைப்போலவே ஒரு பாகம் உண்டு. பல மனைவிகள் இருந்தாலும், எல்லோருக்கும் சேர்ந்து ஒரு ஆண் மகனுடைய பாகம் எவ்வளவோ அவ்வளவு தான் உண்டு. ஒருவருக்குச் சுவீகார மகனும் இருந்து பிறகு சொந்த மகனும் பிறந்தால் ஒரு சொந்த மகனுக்கு எவ்வளவு பாகம் உண்டோ, அதில் 4-ல் 1 பங்குதான் சுவீகார மகனுக்கு உண்டு என்பது தான் சட்டம்.

இவ்வழக்கில் இறந்த சம்பஸப்பாவின் சொத்துக்கள் 9 பாகமாகப் போடப்பட்டன. மூன்று மனைவிகளும் சேர்ந்து இதில் 4 பாகங்களை அடைந்தனர். சொந்த மகன் 4 பாகங்களை அடைந்தான். சுவீகார மகனுக்கு ஒரு பாகம் கொடுக்கப்பட்டது.

(குறிப்பு:—இவ்வழக்கில் இருப்பது பம்பாயில் அனுஷ்டானத்திலிருக்கும் சட்டம். சென்னை சம்பந்தப்பட்ட வரையில் பிராமணரல்லாதாருடைய சுவீகார மகனுக்கும் சொந்த மகனுக்கும் சமபாகம் உண்டு. 44-மதராஸ் 656; 14 லா வீக்லி 270 என்ற வழக்குகளைப் பார்க்கவும்.)

# கேள்வியும் பதிலும்



[இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்குமட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித் தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர, ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது. கேள்விகள் அனுப்பக் கட்டணம் எதுவும் கிடையாது. கேள்விகளைப் புரியும்படி மாற்றி அமைத்துக் கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் ஒவ்வொரு இதழுக்காகவும் சில கேள்விகளை மட்டில் பொறுக்கி எடுத்துக் கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. கேள்வி கேட்பவர்களுக்கு இதை ஆட்சேபிக்கவோ, காரணம் கேட்கவோ உரிமை இல்லை. ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விகளைத் திருப்பி அனுப்புவது சாத்தியமல்ல.]

## விலக்களிக்கப்பட்ட தொகைக்கும் வருமான வரி கட்டவேண்டுமா?

17. கேள்வி: (கோவிந்த செட்டியார் — செவாய்ப்பேட்டை) வருமானவரிக் கணக்குப் பார்ப்பதில் சர்க்காரால் விலக்கு அளிக்கப்பட்ட தொகைக்கு வருமானம் குறைவாக இருந்தால் பூராவும் வரி கட்டவேண்டியதில்லை. வருமான விலக்கு என்று குறிப்பிட்ட தொகைக்கு மேல் ரூ. 100 கூடுதலாக இருந்தாலும், அந்தக் கூடுதல் தொகைக்கு மட்டில் வருமான வரி கட்டவேண்டுமோ? அல்லது விலக்களிக்கப்பட்டிருக்கும் தொகைக்கும் சேர்த்து வரி கட்டவேண்டுமா? உதாரணமாக ஒரு பிரிபடாத இந்து குடும்பத்திற்கு வருமானம் ரூ. 7000 என்றால் வரி எவ்வளவு ரூபாய்க்குக் கட்டவேண்டும்?

பதில்: குறிப்பிட்ட தொகைக்குமேல் ஒரு (லிமிட்டுக்கு மேல்) வருட வருமானமுள்ளவர்களுக்குத்தான் வருமான வரி விதிக்கப்படும். அவ்விதம் வருமானமுள்ளவர்களுக்கு வருமான வரி விதிக்கும்போது அக்குறிப்பிட்ட தொகைக்கு மேல் உள்ள வருமானத்திற்குத்தான் வரி என்பதில்லை. அதாவது வருமான வரி விதிக்கத் தக்கவர்களுக்கு முதல் ஆயிரம் அல்லது இரண்டாயிரத்திற்குத்தான் வரி கிடையாது. அதற்குமேல் உள்ள தொகைக்குப் படிப்படியான வீதாசாரப்படி ரூபாய் 1க்கு இவ்வளவு வரி என்று விதிக்கப்படும். ஒவ்வொரு நிதி வருடத்திலும் யார் யாருக்கு எவ்வளவு தொகைக்கு மேல் வருமானமிருந்தால் வருமான வரி விதிக்கப்படவேண்டுமென்றும், வரி விகிதம் எவ்வளவு என்பதும் அந்த வருடத்திய நிதிச் சட்டத்தால் நிர்ணயம் செய்யப்படும். உதாரணமாக 1—4—1956 முதல் ஆரம்பமாகும் 1956–57 என்ற நிதி வருடத்தில் வரி விதிக்கப்படும்போது, ஒரு தனி நபரின் முந்திய வருட வருமானம் ரூ. 4200 அல்லது அதற்குட்பட்டிருந்தால், அவருக்கு வருமான வரியே விதிக்கப்படமாட்டாது. ஆனால் அவருடைய வருட வருமானம் ரூ. 6000 ஆக இருந்தால் அவருக்கு வருமான வரி உண்டு. அவர் விவாகமானவராக இருந்தால் அவருடைய வருமானம் ரூ. 6000த்தில் முதல் ரூ. 2000க்கு வரியே கிடையாது. அடுத்த ரூபாய் 3000க்கு

ரூபாய் 1க்கு ரூ. 0-0-9 பைசா வீதம் வருமான வரி விதிக்கப்படும். அடுத்த ரூ. 1000க்கு ரூபாய் 1க்கு ரூ. 0-1-9 வீதம் வருமான வரி விதிக்கப்படும். அவர் விவாகமாகாதவராக இருந்தால் முதல் ரூ. 1000க்குத்தான் வரி கிடையாது. அடுத்த ரூ. 4000க்கு ரூ. 1க்கு 0-0-9 வீதமும் அடுத்த ரூ. 1000க்கு ரூ. 1க்கு ரூ. 0-1-9 வீதமும் வரி உண்டு. வேறு ஒரு விதியும் இருக்கிறது. அதாவது ஒருவருக்கு வருமானம் ரூ. 4300 என்று வைத்துக் கொள்ளுவோம். அதாவது ரூ. 4200க்கு மேல் ரூ. 100 தான் அவருக்கு அதிக வருமானம் இருக்கிறது. இந்த அதிகமாக இருக்கும் தொகையில் சரிபாதிக்குமேல் அவருக்கு வரி விதிக்கப்பட மாட்டாது. அதாவது 'லிமிட்'டுக்குமேல் அதிகமாக உள்ள ரூ. 100ல் பாதியாகிய ரூ. 50க்கு மேல் இவருக்கு வரி கிடையாது. பிரிபடாத இந்துக் குடும்பங்களில் பாகம் கேட்கக்கூடியவர்கள் 4 நபர்களாவது இருந்தால் அக்குடும்பத்திற்கு ரூ. 12,600 வரையிலும்; அக்குடும்பத்தில் பாகம் கேட்கக்கூடியவர்கள் குறைந்து 2 நபர்களாவது இருந்தால் அக்குடும்பத்திற்கு ரூ. 8400 வரையிலும் 'லிமிட்' --- அதாவது அதற்குமேல் வருமானமுள்ள குடும்பத்திற்குத்தான் வருமான வரி விதிக்கப்படும். இக்குடும்பங்களுக்கும் விவாகமான தனி நபருக்கு எப்படியோ அப்படியே தான் வரி விதிக்கப்படும். கேள்வியில் கண்டிருக்கும் ரூ. 7000 வருமானமுள்ள இந்து பிரிபடாத குடும்பத்திற்கு வருமான வரியே கிடையாது.

## சைகிளில் இருவர் செல்லலாமா?

18. கேள்வி: (சுப்பய்யா—ஈரோடு) சைகிளில் இருவர் செல்லலாமா? சைகிளில் இரவு எத்தனை மணிவரைக்கும் லைட் இல்லாமல் செல்லலாம்? சிறு குழந்தைகளை வைத்துச் செல்லலாமா?

பதில்: சென்னை சிடி அல்லது முனிசிபல் டவுன்களிலுள்ள ரோடுகளில் சைக்கிள் சவாரி செய்பவர் வேறு எந்த நபரையும் சைகிளில் ஏற்றிச் செல்லக்கூடாது என்று சென்னை போக்கு வரத்து விதிகளில் இருக்கிறது. (Rule 59 (2) - Madras Traffic Rules 1938) ஆகையால் மேற்கண்ட ரோடுகளில் சைகிளில் குழந்தையைக்கூட ஏற்றிச் செல்லுவது குற்றமாகும். மற்ற ரோடுகளில் சைகிளில் இருவர் செல்லுவது தடுக்கப் படவில்லை. சூரியன் மறைந்த அரை மணி நேரத்திற்குப் பிறகும் சூரியன் உதயமாவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்புவரையிலும், இரவு நேரங்களில் சைகிளில் லைட் இருக்கவேண்டும். (சென்னை டிராபிக் ரூல்ஸ்—விதி 43 (b))

## இலங்கையில் வாங்கிய கடனுக்கு இந்தியாவில் தாவா செய்யலாமா?

19. கேள்வி: (சீனுவாசன்—மாரமங்கலம்) இலங்கையில் வியாபாரம் செய்து வந்த இந்தியப் பிரஜை ஒருவருக்கு, இலங்கை அரசாங்கம் வெளியேறும்படி நோட்டீசு கொடுத்து அவர் இந்தியா வந்துவிட்டால், அவர் இலங்கையில் கொடுக்கவேண்டிய கடன்களை இந்தியாவில் வசூல் செய்யமுடியுமா? இலங்கையில் இவர் இந்தியப் பிரஜைகளிடம் கடன் வாங்கி இருந்தால், அங்கே வாங்கிய தொகைக்கு ஷை நபர்மீது இந்தியக் கோர்ட்டுகளில் பிராது செய்தால் ஷை நபரைக் கட்டுப்படுத்துமா? கடனானது வியாபார சம்பந்தமாக சரக்கு வாங்கிய வகையில் இருந்தால் எப்படி? புரோநோட்டு மூலமாக இருந்தால் எப்படி?

பதில்: வியாஜ்யமூலம் எங்கே ஏற்பட்டிருந்தாலும், அயல் நாட்டில் ஏற்பட்டிருந்தாலும், கடன் வாங்கியவர் இந்தியாவில் எங்கே வசிக்கிறாரோ அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள இந்தியக் கோர்ட்டில் அவர் மீது தாவா செய்யலாம். (சிவில் வழக்கு முறைச் சட்டம் செக்ஷன் 20) ஆகையால் இந்தியப் பிரஜையானவர் புரோநோட்டின் பேரிலோ, அல்லது சரக்கு வாங்கிய வகையிலோ இலங்கையில் பட்ட கடனை வசூலிக்க அவர்மீது இந்தியக் கோர்ட்டில் தாவா செய்து டிக்ரி வாங்கலாம்.

சென்ற 1955 இதழ் 5 தொடர்ச்சி

# கூட்டுறவுச் சட்டமும் விதிகளும்.

K. ஸ்ரீநிவாஸன், M. A.

(தஞ்சை ஹூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

[1932-ஆம் வருடத்திய கூட்டுறவுச் சட்டமும் இவை சம்பந்தமான விதிகளும் "வகீல்" 1954-மே இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்படுகின்றன.]

மத்தியபாங்கி நிர்வாகக் கமிட்டியின் ஸ்தானங்கள் எப்படி தீர்மானிக்கப்படுகின்றன?

மத்தியபாங்கியின் நிர்வாகக் கமிட்டி (Board of management) யில் சங்கப் பிரதிநிதிகள், தனி நபர்கள் பிரதிநிதிகளின் விகிதாம்சத்தை ரிஜிஸ்திரார் சம்பந்தப்பட்ட பாங்கியுடன் கலந்து நிர்ணயித்து பைலாவாக்க சிபார்சு செய்யலாம். அப்படிச் சிபார்சு செய்யும் பைலாவில் டைரக்டர்களின் யோக்யதாம்சத்தையும், டிபாசிட்டர்களின் பிரதிநிதிகளின் விகிதாம்சத்தையும் அவர் தீர்மானிக்கலாம். சாதாரணமாக இப்படி சிபார்சு செய்யும் டிபாசிட்டர்களின் விகிதாம்சம் தனி நபரின் பிரதிநிதிகளின் கால் பங்கிற்கும் குறையக்கூடாது. டிபாசிட்டர் பிரதிநிதி தேரப்படாத சந்தர்ப்பத்தில் ரிஜிஸ்திரார் அந்தப் பதவிக்கு யோக்கியதையுள்ள டிபாசிட்டரை தாமே நியமிக்கலாம். (ரூல் XXVI)

ஒரு கமிட்டி-மெம்பர் எந்த நிலைமையில் தனது சங்கத்தின் பதவியை இழப்பார்?

ஒரு கமிட்டி மெம்பர் இன்சால்வெண்ட் ஆனாலும், கிரிமினல் குற்றத்திற்கு தண்டிக்கப்பட்டு மெம்பராயிருக்க அருகதையற்றுப் போனாலும் சங்க கமிட்டியில் தான் வகிக்கும் பதவியை இழப்பார். அவருக்கு புத்தி ஸ்வாதீனம் இல்லாமற் போனாலும், தீராத குஷ்டநோய் ஏற்பட்டாலும் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார். தான் சங்கத்திற்குக் கட்டவேண்டிய பாக்கியை வாய்தா ஏற்பட்டு மூன்று மாதங்களுக்குப் பின்னும் கட்டாமலிருந்தாலும், அல்லது சங்கத்தில் சம்பளம் உள்ள பதவியை ஏற்றாலும், அல்லது அவருடைய நெருங்கின உறவினர் *சங்கத்தில் பதவியில் அமர்த்தப்பட்டாலும், அல்லது சங்கத்திடம் லாபகரமான கண்டிராக்ட் ஒப்பந்தம் செய்துகொண்டாலும், ஒரு மெம்பரின் சொத்தை சங்கபாக்கிக்காக நடக்கும் ஏலத்தில் வாங்கினாலும் அவர் அவை காரணமாகத் தமது பதவியை இழந்துவிடுவார்.

இந்தக் குறைபாடுகள் உள்ள எந்த அங்கத்தினரும் கமிட்டியில் பதவி வகிக்கவும் தேர்தலுக்கு நிற்கவும் அருகதையற்றவராவார்.

கூட்டுறவுச் சங்கங்கள் முழுநேர சம்பளம் வாங்கும் காரியதரிசியை நியமிப்பது பற்றிய விதிகள்.

1942வரை பல பெரிய சங்கங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் கௌரவ காரியதரிசிகளாக இருந்து வந்தனர். அதனால் பல சமயங்களில் வேலைகள் தவக்கப்பட்டன. தவிர ஆபீசில் வேலை செய்த சிப்பந்திகளுக்குப் பதவி உயர்வுக்கு வழியில்லாததால் அவர்களின் உற்சாகமும் திறமையும் குறைந்தன. இவைகளை நீக்க வேண்டி ரூல் XXVIIA செய்யப்பட்டது. அதன்படி ஒவ்வொரு மத்திய பாங்கியும், ரூ. லக்ஷத்திற்மேற்பட்ட வேலை மூலதனம் உள்ள பிரதம பாங்கியும், ரூ. மூன்று லக்ஷத்திற்கு மேற்பட்ட கடன்-நிலுவை உள்ள நில அடமான பாங்கியும் தனது காரியதரிசி பதவியில் ஒரு முழுநேர சம்பள ஊழியரை நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கப்படுபவர் கமிட்டியில் பதவி வகிக்கமாட்டார்.

இதுபோன்ற விதி பெரிய ஸ்டோர்கள், நெசவுச் சங்கங்களுக்கும் செய்யப்படுவது அவசியம்.

---

* நெருங்கிய உறவினர் யார் என்பது ரூலில் குறிக்கப்பட்டுள்ளது. அவை தகப்பன், சிற்றப்பனும் அவன் மகனும், மாமனும் அவன் மகனும், அத்தை, சகோதரி புருஷன், மகன், மைத்துனன் முதலியவர்கள். மற்ற நெருங்கிய உறவுபற்றி சந்தேகம் ஏற்பட்டு ரிஜிஸ்திராருக்கு எழுதினால் அவர் அதுபற்றி முடிவு சொல்லுவார்.

சிப்பந்திகளிடம் ஜாமீன் வாங்குவது பற்றிய விதிகள்.

இது பற்றிய விதி (ரூல் XXVII-B) சமீபத்தில் சர்க்காரால் செய்யப்பட்டுள்ளது. அதன்படிக்கு ரிஜிஸ்திரார் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் ஒவ்வொருவகைப் பதவிக்கும் வாங்கப்படும் ஜாமீன் தொகை எவ்வளவு என்று தீர்மானித்து உத்திரவு பிறப்பிப்பார். ஜாமீன் தொகை எந்த வகையில் (ரொக்கம், சொத்து, நபர்) எவ்வளவு காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டுமென்பதையும் தீர்மானிப்பார். தவிர, குறித்த நபர் விஷயத்தில் வாங்கப்பட வேண்டிய ஜாமீனைக் குறைக்கவும் அல்லது பூராவும் ரத்து செய்யவும் ரிஜிஸ்திராருக்கு அதிகாரம் உண்டு.

ஒரு கமிட்டி மெம்பரின் நெருங்கிய உறவினர் அவர் பதவி வகிக்கும் சங்கத்தில் வேலை பார்க்கலாமா?

நெருங்கிய உறவினர் சங்கத்தில் வேலையில் அமர்த்தப் பட்டால், அவருக்கு உறவான கமிட்டி மெம்பர் தமது பதவியை ராஜினுமா செய்வது முறை. இல்லாதவரை, அந்தச் சிப்பந்தி தமது பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் கமிட்டியில் பதவி வகிக்கும் வக்கீல் அந்தச் சங்கத்திற்கு எதிராக கோர்ட்டில் ஆஜராகலாமா?

கமிட்டியில் பதவி வகிக்கும் ஒரு வக்கீல் தான் பதவி வகிக்கும் சங்கம் அல்லது அதில் இணைக்கப்பட்ட சங்கத்திற்கு எதிராக வக்காலத்து வாங்கக் கூடாது. சாதகமாகக்கூட பணம் வாங்காமல்தான் ஆஜராகி வாதாடலாம். (ரூல் XXIX)

ஒரு சங்கத்தின் சார்பாக மற்றொரு சங்கத்தில் பதவி வகிப்பது பற்றிய விதிகள்.

1. ஒரு சங்கத்தின் சார்பாக மற்றொரு சங்கத்தில் பதவி வகிப்பவர் அந்தச் சங்கத்தின் பைலாப்படி முறையாக நியமிக்கப்பட்டிருக்கவேண்டும்.

2. அவர் தொடர்ந்து பதவியில் இருந்துவர யோக்கியமாய் எந்தச் சங்கத்திலும் 3 மாதங்களுக்கதிகமாக தவணை தவறிய பாக்கி உடையவராய் இருப்பது கூடாது.

3. அவரைத் தேர்ந்த சங்கம் அவரை வாபீசு பெற்றாலும், அல்லது அவருடைய பதவிக்கு வேறு ஒருவரைத் தேர்ந்தாலும் அவர் தமது பதவியை இழந்துவிடுவார்.

4. சங்கத்தின் கமிட்டி செக்ஷன் 43படி ரிஜிஸ்திராரால் நீக்கப் பட்டாலும், செக்ஷன் 44, 45படி சங்கம் கலைக்கப்பட்டாலும் இவருடைய பதவி அது காரணமாக ரத்தாகிவிடும்.

கூட்டுறவுச் சங்க ஆபீஸர் தனது சங்கத்தின் சாமான்களை பகிங்ரக ஏலத்தில் வாங்கலாமா?

கூடாது. ஒரு சங்கத்தில் வேலை செய்யும் எந்த உத்தியோகஸ்தரும்.

1. அந்தச் சங்கத்துடன் லாபகரமான ஒப்பந்தம் செய்வதும்,

2. சங்கத்தால் நடத்தப்படும் ஏலத்தில் பங்கு கொள்வதும்,

3. சங்க பாக்கிக்காக நடக்கும் ஏலத்தில் மெம்பரின் சாமான்களை வாங்குவதும் கூடாது. (ரூல் XXX (2))

ஒரு சங்கம் தனது பைலாவை திருத்திக்கொள்வது பற்றி.

செக்ஷன் 12படி சங்கம் திருத்திக் கோரும் பைலா ரிஜிஸ்திராரால் அங்கிகரிக்கப்பட்ட பின்னரே அமுலுக்கு வரும். சங்கம் கோரும் திருத்தத்தை ரிஜிஸ்திரார் பதிவு செய்ய மறுத்தால் அவர் அந்தத் தகவலை சங்கத்திற்கு ரிஜிஸ்தர் தபால் மூலம் தெரிவிப்பார். சங்கம் அவசியமென்று கருதினால் அந்த உத்திரவின்மீது ராஜ்ய சர்க்காரிடம் உத்திரவு தேதிமுதல் இரண்டு மாதங்களுக்குள் அப்பீல் செய்து கொள்ளலாம்.

பைலாவைத் திருத்தம் செய்ய வேண்டிய முறையும் அது ரிஜிஸ்திராருக்கு அனுப்பப்பட வேண்டிய முறையும் ரூல் XXIV-ல் கூறப்பட்டுள்ளது. சங்கம் மகாசபையை பைலாவில் குறித்துள்ளபடி நோட்டீஸ் கொடுத்துக் கூட்டவேண்டும். மீட்டிங் நோட்டீஸில் பைலாவின் திருத்த விபரம் குறிக்கப்பட் டிருக்கவேண்டும்.

பெரும்பான்மையினரால் மகாசபை மீட்டிங்கில் பைலாத் திருத்தம் அங்கிகரிக்கப்பட்டதும் அதை சங்கக்கமிட்டி கீழ்க்கண்ட விவரங்களுடன் ரிஜிஸ்திராருக்கு எழுதி அனுப்பிக்கொள்ள வேண்டும்.

i. மீட்டிங்கு தேதி. ii மீட்டிங்குக்காக கொடுக்கப்பட்ட நோட்டீஸ் நாட்கள்.

iii. சங்கத்தில் உள்ள மெம்பர்கள். iv. பைலாப்படி மீட்டிங்கில் இருக்கவேண்டிய வர்கள். v. மீட்டிங்கிற்கு வந்திருந்தவர்கள். vi. திருத்தத்தை ஆதரித்தவர்கள்.

இந்த தகவல்களைக் கொண்ட மனு, சங்க பிரசிடெண்டு மற்றும் இரண்டு கமிட்டி மெம்பர்களால் கையெழுத்திடப்பட்டு சங்க சீலுடன் ரிஜிஸ்திராருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

ஒரு பெரிய சங்கத்தைப் பலவாகப் பிரிக்கவும், பல சிறிய சங்கங்களை ஒன்றாக இணைக்கவும் கூட்டுறவுச் சட்டத்தில் வழி உண்டு.

அது செக்ஷன் 13 படி செய்யப்பட வேண்டும்.

பிரிவினை முறை.

ஒரு பெரிய சங்கத்தைப் பலவாகப் பிரிக்கும் அவசியம் பற்றி சங்கக் கமிட்டி முதலில் யோசிக்கும். பின்பு 7 நாட்கள் முன் நோட்டீஸ் கொடுத்து மகாசபையைக் கூட்டி, கமிட்டி தனது பிரிவினை சிபார்சை ஒரு தீர்மானமாகத் தாக்கல் செய்யும். பிரிவினைத் தீர்மானத்தில் பிரிக்க உத்தேசிக்கும் சங்க எல்லைகள், பைலாக்கள், ஆஸ்தி பொறுப்பு, கடன் பிரிவினை விபரங்கள், அதில் சேரும் மெம்பர்கள் முதலியவைகள் குறிக்கப்பட்டிருக்கும்.

பிரிவினைத் தீர்மானம் மகாசபையில் நிறைவேற்றப்பட்டால் உடனே கமிட்டி மேற்படி தீர்மானத்தின் நகலை பிரதி மெம்பர், டிபாசிட்டருக்கும் அனுப்பி வைத்து, பிரிவினையை அங்கீகரிக்காதவர்களை தீர்மான நோட்டீஸ் கிடைத்த மூன்று மாதத்திற்குள் தங்களுக்குச் சேர வேண்டிய தொகைகள் வேண்டுமா என்று எழுத்து மூலம் தெரிவிக்கும்படி கோர வேண்டும்.

மூன்று மாத கெடுவிற்குப் பின்பு (பெரும்பான்மையான மெம்பர்களும் டிபாசிட்டர்களும் பிரிவினையை ஒப்புக் கொண்டிருந்தால்) கமிட்டி, 15 நாள் நோட்டீஸ் கொடுத்து மகாசபையைக் கூட்டி முன்பு நிறைவேற்றப்பட்ட பிரிவினைத் தீர்மானத்தை உறுதி செய்யக் கோரும் மகாசபை, முதல் தீர்மானத்தைக் கூடியமட்டும் மாறுதலின்றி 3-ல் 2 பங்கு வாக்குகளால் உறுதி செய்யவேண்டும்.

மகாசபை, பிரிவினைத் தீர்மானத்தை நிறைவேற்றியதும், கமிட்டி அதை புதுச் சங்க பதிவு-மனு ரூபத்தில் எழுதி ரிஜிஸ்திராருக்கு அனுப்பி வைக்கும். ரிஜிஸ்திரார் சங்கத்தின் பிரிவினையை அங்கீகரிக்காதவர்களுக்குச் சேர வேண்டிய பங்குத் தொகை, டிபாசிட் தொகைகள் வாபஸ் செய்யப்பட்டதா என்பது பற்றி திருப்தி செய்து கொண்டு பிரிக்கப்பட்ட புதிய சங்கங்களை ரிஜிஸ்தர் செய்வார். இந்தப் புதிய சங்கங்கள் பழய சங்கத்தின் பிரிக்கப்பட்ட ஆஸ்தி பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு வேலை துவக்கியதும், பழைய சங்கத்தின் பதிவு ரத்தாகிவிடும்.

இணைப்பு முறை :

பல சிறு சங்கங்களை ஒன்றாக இணைப்பதற்கு முதலில், ஒன்றாக இணைய விரும்பும் சங்கங்களின் கமிட்டிகள் கூடி இதுபற்றி யோசிக்கும். பின்பு, அவைகள் தங்கள் தங்கள் சங்கமகாசபையை ஒருவார நோட்டீஸ் கொடுத்துக் கூட்டி பொதுவில் ஒப்புக்கொள்ளப்பட்ட இணைப்புத் தீர்மானத்தைத் தெரிவிக்கும். இணைப்புத் தீர்மானம் அந்தந்த மகாசபையில் மெஜாரிட்டியில் நிறைவேற்றப் பட்டதும் கமிட்டி தங்கள் சங்க மெம்பர்கள், டிபாசிட்டர்களுக்கு அந்த இணைப்புத்தீர்மானத்தைத் தெரிவித்து, இணைப்பை விரும்பாதவர்கள் தங்கள் பங்குத்தொகை டிபாசிட்டுகள் வேண்டுமென்று 3 மாதங்களுக்குள் எழுத்து மூலம் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று கோரும்.

மூன்று மாதங்கள் கழிந்ததும் மெஜாரிட்டியான மெம்பர்கள் இணைப்பை ஆதரித்திருந்தால், இணையும் சங்கங்களின் கமிட்டிகள் ஒன்றுகூடி 15 நாள் வாய்தாவில் எல்லாச் சங்கங்களினுடைய ஒரு பொது மகாசபையைக்கூட்டி இணைப்புத் தீர்மானத்தை உறுதி செய்யும். அந்த மகாசபையில் புதிய (இணைந்த) சங்கத்தின் பைலாக்களும், நிர்வாகக் கமிட்டியும் தீர்மானிக்கப்படும்.

(தொடரும்)

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVADAMARUDUR AND PUBLISHED BY K. NARASIMHAN, B.A., B.L., AT No. 73, DABIR WEST STREET, KUMBAKONAM FOR THE VAKIL PUBLICATIONS Private LIMITED, Editor V. S. VIJAYARAGAVACHARI, B.A., B.L.



சென்னை-600 008




**மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!**
**ஆடை அழகும் வேண்டும்!**
**ஆடை அழகு பெற**

**—: அறந்தாங்கி :—**

# 786 சங்கு சோப்பை




**வாங்கி உபயோகியுங்கள்**
**கட்டி 1-க்கு அணு 0-1-3 தான்**

தயாரிப்பவர்:-

**இ.கா.ரு.மு.காதர் நயினு முகம்மது,**
**786 சங்கு சோப் ஓர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.**

---

# 'ஜெயராம்' ஹெர்னியா க்யூர்

**குடல்வாத நிவாரணியை உபயோகியுங்கள். 3–தினத்தில் குணம் தெரியும்.**


| | | | |
|---|---|---|---|
| **எலிமெண்டரி கேஸ்** | .... | ரு. | 6-0-0 |
| **செகண்டரி கேஸ்** | ... | ரு. | 11-0-0 |
| **அட்வான்ஸ் கேஸ்** | .... | ரு. | 25-0-0 |

**உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.**

From: GEORGE SELVARAJ, / To *Dr. Jayaram Avl, Kumbakonam.*
Asst. Edward High School, SATTUR.

மகா-ள-ள-ஸ்ரீ டாக்டர் அவர்களுக்கு நமஸ்காரம்.

தாங்கள் அனுப்பிய 'காயசுத்தி ஸ்பெஷல்' லேகியத்தையும் காயசுத்தி பஸ்பத்தையும் 26—1—49 முதல் சாப்பிட்டு வருகிறேன். தகுந்த பக்குவ முறைப் படியும் பத்திய முறைப்படியும் அதன் பலனுக சிறிது மாறுதல் காணப்பட்டு ஆனந்தம் அடைந்தேன். அதாவது முன்பு காலையில் எழுந்து 10 நிமிஷங்களுக்கெல்லாம் குடல் கீழிறங்கிவிடும். ஆனல் இப்போது நான் சுமார் கால் மைல் தூரம் நடந்து சென்று ஸ்னனம் செய்துவிட்டு வந்தபின்பும் வலியோ குடல் இறக்கமோ இல்லை. ஆகாரம் சாப்பிட்டபின்தான் சிறிது இறங்குகிறது. இதிலிருந்து நான் கூடிய சீக்கிரம் குணமடைய முடியுமென நம்புகிறேன். தற்போது லேகியம் சுமார் இரண்டு மூன்று நாட்களுக்குத்தான் இருக்கும். பூரண சுகம்பெற இன்னுமொரு டப்பா அவசியமென நினைக்கிறேன். ஆகையால் இந்த லெட்டர் கண்டதும் தயவு செய்து மறுதபாலில் காயசுத்தி 'ஸ்பெஷல்' லேகியம் ஒரு டப்பா அவசியம் அனுப்பிவைக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன். காயசுத்தி பஸ்பம் இன்னும் சுமார் 15 நாட்களுக்குப் போதுமான அளவு இருக்கிறது.




சாத்தூர்,
18—2—49.

இப்படிக்கு தங்கள் நன்றியுள்ள,
**ஜார்ஜ் செல்வராஜ்.**

**G. ஜெயராம் வைத்தியசாலை, (Regd)**
**28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, :: கும்பகோணம்.**

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்




பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்குக் குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற
சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம்,
வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்,
பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*
For Madras
**SURAJ AGENCIES,**
**MADRAS.**

*For Coimbatore, Palghat & Nilgiris.*
**B. BALAPATTABI CHETTIAR,**
249, Vysyal Street,
**COIMBATORE.**